ஒரு மென்பொருள் வடிவமைப்பை தாண்டி, இயக்கும் நிலையில் இருக்கும் என்றாலும் அதனை பொது வெளியீடு என்று வரும் பொழுது ஒரு பட்டியலிட்டு அதனில் உள்ள குணாதிசயங்களையும், சிறப்பம்சங்களையும் சரிவர வேலைசெய்கிறதா என்றும் பரிசோதித்து வெளியிடுவது மிக முக்கியமான கணினி பொறியியல் வளர்ச்சி நிலை. இந்த நிலையை எட்ட எழில் [படம் : 1,2] மொழியில் பல படிகள் இந்த ஆண்டு

எடுக்கப்பட்டது. முக்கியமாக Windows, Linux இயங்கு தளங்களில் எழில் திரட்டி - “எழுதி” என்ற இடைமுகம் [படம்: 3, 5] - தயார் நிலையில் பயன்டுத்தும் வகை சேய்த்தோம். மேலும் Android தளத்தில் ஒரு “எழில் கையேடு” [படம் 4] என்ற குறுஞ்செயலி (mobile app) ஒன்றையும் படைத்துள்ளோம். இந்த வேலையில் நாங்கள் சந்தித்த சவால்களையும் பற்றி இந்த கட்டுரையில் பதிவு செய்கிறோம். எழில் மொழியை வெளியீடு செய்ய பங்களித்த அனைவருக்கும் எங்களது நன்றிகள் - எங்களது முன்னேற்றத்தை பட்டியல் 1-இல் பார்க்கலாம்:

Project	Stars	Language	closed issues	open issues	pull requests	Fork	Contributors
Ezhil-Lang	78	Python	100	93	59	35	11

பட்டியல் 1:Github-இல் எழில் மொழி பங்களிப்பு தளத்தின் புள்ளிவிவர பட்டியலில்

எழில் மொழி பல ஆண்டுகளாக ஆமை வேகத்தில் இதன் வளர்ச்சி தொடர்ந்து வந்திருக்கிறது; இருந்தாலும் வளர்ச்சியை நிரல் வரிகளில் எண்ணமுடியாது - மொழியின் தாக்கத்திலும், கடைசி பயனாளர்களிடத்திலும் மட்டுமே காண முடியும்.

படம் 1: எழுதி செயலி தொடக்க படம்.

படம் 2: எழில் மொழி சின்னம்.

எழில் மொழியை இப்படி சிறுவர் சிறுமியர் பொது பயன்பாட்டிற்கும், அவர்களுக்கு கற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு தேவைப்படும் எழில் மொழி விளக்கம், கணிமை பாடங்கள், விளக்க உரை, போன்றவற்றை தயார் செய்து கல்வி நுகர்வோர்க்கு இணங்க செய்வதே முக்கியமான வேலை. எழில் மொழியையே நிரல்படுத்தி, பரிசோதிக்கும் வேலையை தாண்டி, இந்த எழில் மொழி கல்வி பள்ளிக்கூடங்களில்

இலகுவாக எழிலை புகட்ட தேவையான அம்சங்கள் அனைத்தையும் மென்பொருள் வெளியீட்டு ரீதியில் அளிக்க இங்கு முயல்கிறோம்.



படம் 3: எழுதி - எழில் மொழி செயலி உத்தாரணங்களுடன் பயனர் இடைமுகம்

எழில் கற்க பயிற்சி பாடங்கள்

தமிழில் நிரல் எழுது புத்தகம் [5.1], யூடியூப் காணொளிகள் [5.2] போன்றவற்றை தயாரித்து வெளியிட்டும் எழில் மொழியை பயில வழிவகுத்துள்ளோம். காணொளியில் கிட்டதிட்ட 35min நிமிடங்கள் பயிற்சி [5.2]-இல் இலவசமாக உள்ளது. இதனை எழுதி என்கிற மென்பொருளில் இயக்கி காணொளியை கண்டபடியே படிக்கலாம். இதையும் தொடர்ந்து வழங்கி வருவது எங்கள் குறிக்கோள். படம் 3. -இல் காட்டியபடி எழுதி செயலியில் கிட்டத்தட்ட 175 இக்கும் கூடுதலாக நிரல் உதாரணங்கள் உள்ளன. படம் 5. இல் எழில் மொழியில் LOGO போன்ற படங்கள் வரைவதை எடுத்துக்காட்டாக செய்துள்ளோம்.

இணைய தளத்தில் சிக்கல்கள்

எழில் மொழியில் இணைய தளம் http://ezhillang.org மற்றும் http://urbantamil.com என்ற இரு தமிழ் மொழி சார்ந்த தளங்கள் AWS Amazon மேக கணினியில் இயங்கி வந்தன. ஆனால் எழில் மொழி “கூடம்” இணையம் வழி எழில் [3] என்றபடி உங்கள் உலவியில் இருந்தே எழில் மொழியை கற்று கொள்ளலாம் என்றபடி உள்ள சலுகை வழியாக தீயவர்கள் எழில் மொழி இணையத்தை அக்டொபேர் 2016 தொடங்கி

தரகர்த்தனர். இதன்பின் மூன்று மாதங்களுக்கு இந்த இணையதளங்கள் இரண்டும் செயலற்று கிடந்தன. இன்றும், இதன்பின், கூடம் என்ற இணையம் வழி எழில் என்ற சேவையை நிறுத்தினோம்; urbantamil.com என்ற இணையதளம் முழுதாக தாக்கப்பட்டு முடங்கியது.

இணையத்தில் மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்றும் பாதுகாப்பாக செயலிகளை நிறுவவேண்டும், செயலிகளை பாதுகாக்கவேண்டும் என்பது ஒரு கடினமான பாடத்தை கற்றோம்.

திறன்பேசியில் எழில்

தற்போதய காலத்தில் எங்கும் கைபேசிகள் திறன்பேசியால் மாற்றம் அடைவதனால் இந்த ஒரு இயங்கு தளத்திலும் மாணவர்களை சென்றடைய எழில் மொழி கையேடு என்ற ஒரு செயலியை உருவாக்கினோம். இது இணையதளத்தின் தாக்குதலுக்கு முன்பே இணையத்தில் server-களை மேம்படுத்துவதும் சவாலாக உள்ளதை கண்டு நாங்கள் திட்டமிட்ட ஒன்று; இணைய தளம் செயலுற்றபின் இந்த முயற்சியில் மிகவும் கவனம் செலுத்துகிறோம்.

தற்போது “எழில் கையேடு” என்ற செயலியை நீங்கள் பரிசோதனை முறையில் Google Play Store-இல் இருந்து பெறலாம் [6]. இது December, 2016 அன்று வெளியிடப்பட்டு 40-50 நபர்களால் தங்கள் கைபேசியிலேயே எழில் மொழியை பயின்று, இணையம் வழி ezhillang.org “கூடம்” வழி நிரல்களை இயக்கியும் எழில் மொழியை பழகலாம். தற்போது “கூடம்” இயக்கத்தில் சவால்கள் உள்ளதால் இந்த செயலியை முழு வீச்சில் வெளியிடவில்லை. இதற்கும் தீர்வு காண்போம் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. எழில் கையேடு செயலியை முதல் படியாக கருணாகரன் கணேசன் உருவாக்கி, எங்களுடன் இதனை வெளியீட்டு நிலைக்கு கொண்டுவந்தார். இவர் வருங்கால பொறியாளர், பழகும் மாணவர்.

எழுதி இடைமுகம் பரிசோதனை, தரப்படுத்தல்

வெளியீடு செய்யும் முன் ஒரு மென்பொருளில் சில வழிமுறைகளை பின்பற்றுவது பொறியியல் நடைமுறை.

1. தனி பரிசோதனை (unit tests)
2. கூட்டு பரிசோதனை (integration tests)
3. இயங்குதளம் நிறுவல் பரிசோதனை (operation system installation tests)
4. பயனர் இடைமுகம் பரிசோதனை (user interface testing)





படம் 4 (இடது): எழில் மொழி "எழில் கையேடு" ஆண்ட்ராய்டு கைபேசி செயலி.

படம் 5 (வலது): எழுதி செயலியில் சதுரத்தில் இருந்து சுழற்சி வரைவது நிரல்.

இவை எல்லாவற்றையும் செய்தால் ஒரு நல்ல மென்பொருளை தரமாக உருவாக்கலாம் என்பது கணினியியலில் நடைமுறை புரிதல். இவற்றை எழில் மொழியில் படி 1, 2, போன்றவற்றை நேரடியாகவே எழில் source code இல் continuous integration வழி [7] செய்துள்ளோம்; அடுத்த படி 3, 4 பரிசோதனைகளை கைவழி செய்தோம்.

எங்களுக்கு தெரிந்தவரை "எழுதி" மென்பொருளை பரிசோதனை செய்தும், பின்னூட்டங்களை அணுகியும் ஒரு தரமான மென்பொருளை உருவாக்கியுள்ளோம் என்பது நம்பிக்கை. மென்பொருளில் பிழை/வழு இல்லாத மென்பொருள் என்பதே இல்லை. இதில் உள்ள பொறியியல் சிக்கல் (complexity) கையாள்வதற்கு ஒரு மனிதர் தேவை – இதனை முழுதுமே செயற்கை நுண்ணறிவால் (A.I.) தானியங்கி படுத்தமுடியுமா என்பது காலத்தால் மட்டுமே சொல்லக்கூடிய கேள்வி.

அடுத்த கட்டம் - முடிவுரை

எழில் எங்கே போகிறது என்பதை பற்றி யோசித்துள்ளோம் [8]; இதன்படி ஒரு தரமான எழுதியை உருவாக்கியுள்ளோம். இதனை சரிவர விளம்பரம் செய்து, மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பது அடுத்த கட்டம். எழில் மொழி இப்போது பயிற்சிக்கு தயார், ஆனால் மாணவர்களும், ஆசிரியர்களும், பள்ளிகளும் தயாரா ? அவர்கள் தேவைகளை எழுதி மட்டும் எழில் அணி சந்திக்குமா என்பது களத்தில் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை. அதன்பின் ஒருநாள் எழில் மொழியும் தமிழகமெங்கும் தரப்படுத்தப்படும் நாள் கூட வரும் என்பதும் எங்கள் குறிக்கோள்.

மேற்கோள்கள்

1. M. Annamalai, “Ezhil (எழில) : A Tamil Programming Language,” ArXiV/0907.4960 (2008).
2. M. Annamalai, et-al “An Introduction to Ezhil - Programming the Computer in Tamil,”Tamil Internet Conference(INFITT), Kuala Lampur, Malaysia (2013).
3. M. Annamalai, et-al “Learning Ezhil Language via Web,” Tamil Internet Conference(INFITT), Puducherry, India (2014).
4. Elango Cheran, “Exploring Programming Clojure in Other Human Languages,” Clojure/West, Portland, Oregon (2015)
5. (1) Write Code in Tamil - Ezhil Programming Language, paperback (2013), available https://www.amazon.com/Write-Code-Tamil-Programming-Language/dp/1547233915

   (2) எழுதி - எழில் கணினி மொழி (காணொளி பட்டியல்) https://www.youtube.com/playlist?list=PLo6YZ6ilTE53mRVQelij9lXg6xiOonhXM
6. Ezhil Language Handbook (எழில் கையேடு), Google Play Store at https://play.google.com/store/apps/details?id=com.ezhil.handbook
7. Travis C.I. Ezhil Language Continuous Integration and Unit Testing https://travis-ci.org/Ezhil-Language-Foundation/Ezhil-Lang
8. M. Annamalai, “எழில் எங்கே போகிறது”, http://ezhillang.wordpress.com/2017/03/02/ வலை பதிவு.

தமிழின் பெருந்தரவகத் தரவுகள் தேவையும், பயன்பாடும்

செல்வமுரளி

விசுவல்மீடியா டெக்னாலஜிஸ், Email : murali@visualmediatech.com

நாள்தோறும் வளர்ந்துவரும் தமிழ்க் கணிமையின் வளர்ச்சி தற்போது உரையிலிருந்து ஒலிக்கு மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது என்றாலும் நாள்தோறும் வளர்ந்து ஒவ்வொருத்துறையிலும் தமிழை நிலைநிறுத்துவது தமிழ் சமூகத்திற்கு தேவையான ஒன்று.

தமிழில் ஆதியிலிருந்து இதுவரை கிடைத்த தகவல்களை தொகுத்து நம்மிடையே நம் பயன்பாட்டுக்கு வைத்திருக்கிறோமா என்றால் இல்லை. தமிழை ஒரு கருவியாக பயன்படுத்துவதை விட தமிழை ஒரு சேவையாக கொண்டுவருவதே அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் சிறந்த சேவை என்றும் கூறலாம். அதாவது தமிழை வர்த்தகமொழியாக மாற்றுவது. தமிழ் மொழிக்கான வர்த்தக சேவை ஆண்டு பல கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. ஆனால் ஆங்கில மொழிக்கான வர்த்தக சேவை பல லட்சம் கோடிகளில் உள்ளது.எல்லா கருவியிலும் ஆங்கிலம் உள்ளது. ஏனெனில் ஆங்கிலம் ஒரு வர்த்தக மொழி.

நம் தமிழை வர்த்தக மொழியாக மாற்றத் தேவையான பல தேவைகளில் தமிழுக்கான பெருந்தரவகம் (BigData Database) ஒன்று. பெருந்தரவரக தரவுத்தளத்தினை உருவாக்கிவிட்டால் தரவு அறிவியல் (டேட்டா சைன்ஸ்) கொண்டு எல்லா துறைகளிலும் சமூக பயன்பாட்டுக்குத்தேவையான பயன்பாடுகளை எளிதாக உருவாக்கிட முடியும். இதன் மூலம் தமிழையும், தமிழோடு சமூகத்தினையும் உயர்நிலைக்கு கொண்டு செல்ல முடியும். இங்கே விவசாயம், மருத்துவம் ஆகிய இரண்டு துறைகளை மட்டும் நான் என் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறேன்

விவசாயம்

சங்கக்காலத்தில் வகைப்படுத்திய ஐந்திணை நிலங்களில் உள்ள மக்கள் தம் நிலத்தில் என்னென்ன பயிர்களை விளைத்திருக்கிறார்கள் என்பதை நாம் பாடப்புத்தகங்கள் வழியே தெரிந்துகொண்டாலும் விவசாயம் சார்ந்த பருவநிலைகள், பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட சீரழிவுகள் , பேரழிவு போன்றவற்றையும் கண்டறிந்து தரவு அறிவியல் வழியே எதிர்காலத்தில் ஏதேனும் சிக்கல் நேர்ந்தால் சமாளிக்க ஏதுவாக அதன் வழிமுறைகளை உருவாக்கலாம்.

ஐந்திணைகளில் கொடுக்கப்பட்டுள்ள பருவ நிலை

இளவேனில், முதுவேனில் , கார், கூதிர் (குளிர்), முன்பனி, பின்பனி என்ற பருவநிலைகளில் பிரித்து வைத்தாலும் இளவேனில் என்பதற்கான வெப்பநிலை, ஈரப்பதம், மழைப்பொழிவு, காற்றின் வேகம், காற்றின் திசை போன்றவற்றை

வளரக்கூடிய பயிர்கள், இச்சூழ்நிலைக்கு பொருந்தா பயிர்கள் என எல்லாவற்றையும் தொகுக்கவேண்டியும் அவசியம்.

இவைகள் ஒருபுறம் இருக்க பொருட்களின் இணையம் (IoT) மூலம் பல ஏக்கர் அளவிலான விவசாயத்தினை வெகுஎளிதாக செய்யலாம் என்ற அளவிற்கு தொழில்நுட்பங்கள் வந்துவிட்டாலும் இன்னமும் நாம் முறையாக விவசாயத்திற்கான தரவு அறிவியலை உருவாக்கவில்லை என்பதே உண்மை.

Soil Sensor System - மண் உணர்வி

மண் உணர்வியை விவசாயம் செய்யும் மண்ணுக்குள் புதைத்து வைத்துக்கொண்டால் கம்பியில்லா இணைப்பின் மூலம் மண்ணில் ஈரப்பதம் இருக்கிறதா? இல்லையா என்பதை நம் செல்பேசியின் வழியாக மேலாண்மை செய்யலாம். மண்ணின் ஈரப்பதம் குறைவாக இருந்தாலும் நமக்கு தகவல் தெரிவிக்கப்படும். இவற்றை தானாக செயல்படுத்த வேண்டுமெனில் எல்லா பயிர்களுக்கும் தேவையான ஈரப்பதத்தின் அளவு பற்றிய தகவல் தரவுத்தளமாக நம்மிடையே இருக்கவேண்டும். உதாரணத்திற்கு நெல்லிற்கான ஈரப்பதம் அதிகமாக இருக்கவேண்டும்.



ஆனால் மற்ற பயிர்களுக்கான ஈரப்பதம் குறைவாக இருக்கவேண்டும். எனவே அனைத்து வகை பயர்களின் ஈரப்பத விபரங்களை உருவாக்கவேண்டியது அவசியமாகிறது. இத்தரவுத்தளத்தினை உருவாக்கிவிட்டால் **humidifier** என்ற ஈரப்பதமூட்டியைக் கொண்டு ஈரப்பதத்தினை தேவையான அளவு கொண்டுவந்துவிட முடியும்.

தானியங்கு நீர் மேலாண்மை அமைப்பு

விவசாய நிலங்களுக்குத் தேவையான அளவு தண்ணீரை நாமே வழங்கிட பொருட்களின் இணையம் தொழில்நுட்பம் பயன்படுகிறது. இந்த தொழில்நுட்பங்களை மேலாண்மை செய்யவேண்டுமெனில் பயிர்களுக்குத் தேவையான ஈரப்பதம் ,

தண்ணீரின் அளவு போன்வற்றிக்கான தகவல்களை திரட்டி தரவகமாக மாற்றுவது அவசிய தேவையாகிறது.



DIY an Automatic Plant Watering Device

நம் வீட்டுத்தோட்டங்களுக்கு நாமில்லாத சமயங்களிலும் தண்ணீர் விட இதோ இந்தக் கருவி பயன்படுகிறது. DIY an Automatic Plant Watering Device, இதற்குத்தேவை மேலே சொன்ன மண் ஈரப்பத உணர்வியும், ஒரு சிறிய கட்டுப்பாட்டகமும் வை-பை இணைப்பும் இருந்தாலே போதும்.

பூச்சிகள் மேலாண்மை

அசைவு உணர்விகள் மூலம் பயிர்களைச் சுற்றியுள்ள பூச்சிகளின் எண்ணிக்கையை தெரிந்துகொள்ளலாம், அதோடு எந்த வெப்பநிலையில் அவைகள் பயிர்களுக்கு வருகின்றன. எந்த வெப்பநிலையில் அவவைகள் பயிரை விட்டு விலகுகின்றன போன்ற எல்லா விபரங்களும் இதனோடு பொருந்தும்.

மருத்துவம்

மருத்துவத்துறையில் பெருந்தரவகத்தின் தரவுகம் மிகவும் அத்தியாவசதியத்தேவையாகிறது.



Source: National Family Health Survey, 2015-16

தமிழகத்தில் தற்போது உள்ள பெண்களுக்கு ஹீமோகுளோபின் எனப்படும் ரத்தசிவப்பணுக்கள் பற்றாக்குறை 50%க்கும் மேல் உள்ளது என்று இந்திய மருத்துவ ஆய்வுக்குழு அறிவித்துள்ளது. இது ஒரு மோசமான விளைவு எனக்கொள்ளலாம்,

ஆனால் இது எதனால் ஏற்பட்டது என்பதை அறிய நமக்கு தமிழகத்தின் கடந்த 50 வருடங்களில் ஏற்பட்ட உணவு மாற்றங்கள், பருவ நிலை, உண்ணும் உணவு, வேலை, மன உளைச்சல் என பல காரணிகளை கண்டறிய வேண்டிய அவசியமும் உள்ளது.



Source: Lok Sabha (As of March 2017)

ஆனால் நம்மிடையே பொதுவான தரவுகள் மட்டுமே உள்ள உள்ளனவே தவிர மேற்கண்ட காரணிகள் நம்மிடையே இல்லை. அதோடு தமிழகத்தில் உள்ள அனைத்துப்பள்ளிகளிலும் வருடந்தோறும் மாணவ/மாணவியர்களுக்கு மருத்துவபரிசோதனைகளை பெருந்தரவகமாக மாற்றுவது மிகஅவசியமானது. ஏனெனில் பள்ளி மாணவ/மாணவிர்களிடையே வருடந்தோறும் கிடைக்கும் மாணவர்களின் தகவல்களின் அடிப்படையில் ஏதேனும் உடல் ரீதியான சிக்கல்கள் இருந்தால் அவற்றினை கண்டறிந்து அவர்களுக்கு ஆரம்பக்கட்டத்திலேய குணப்படுத்திட முடியும். இதன் மூலம் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் எதனால் இந்த சிக்கல் ஏற்படுகிறது என்பதை மேலே விவசாயத்தில் கொடுத்த தகவல்களை கொண்டு ஆராய்ந்திட முடியும். இதுபோன்று எல்லா துறைகளுக்கும் தமிழகத்திற்கான, தமிழக மக்களுக்கான, தமிழகத்தில் உள்ள நிலங்கள், மலைகள், காடுகள் என எல்லாத்தரவுகளையும் பெருந்தரவகத்தில் சேர்க்கவேண்டியது அவசியம்.

இப்போது இவையெல்லாம் சில விழுக்காடுகள் கிடைத்தாலும் தொகுக்கப்படாமல் இருக்கின்றன. ஏற்கனவே கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எனவே இவற்றினை முழுமையாக தொகுக்கவேண்டியது அவசியம் இதை உருவாக்குவதில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்கள், நடைமுறை சிக்கல்களை ஆராய்ந்து இதனை செயல்படுத்த என்ன தேவைகள் என்பதை வெளி கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கம்

தீர்வுகள்

விவசாயம் மற்றும் மருத்துவத்துறை சார்ந்த சிக்கல்களை பெருந்தரவகம் மற்றும் தரவு அறிவியலைக் கொண்டு எளிதாக எதிர்கால பிரச்னைகளை தீர்க்கலாம். ஆனால் அதற்கு நமக்கு தேவையான தகவல்களை திரட்டி ஓரிடத்தில் சேமிக்கவேண்டியது அவசியமாகிறது. அதற்கு கீழ்க்காணும் தொழில்நுட்பங்கள் பெரும் உதவி புரியும்.

விவசாயத்திற்கு தேவையான காரணிகளை அடையாளம் காண பொருட்களின் இணையம் (IoT), அவற்றினை சேமிக்க மேகக்கணிமை (Cloud Computing) போன்ற

தொழில்நுட்பங்கள் நம்மிடையே எளிதே கிடைக்கின்றன. இதன் மூலம் விதையின் தரம், மண்ணின் வளம், மழை தண்ணீரின் pH மதிப்பு, காற்றின் வேகம், காற்றின் மாசு அளவு, பூச்சிகள் மேலாண்மை என எல்லா விபரங்களையும் சேர்த்து விவசாயிகளுக்கான மையத்தரவுத்தளத்தினை உருவாக்கிடலாம். மேலே உள்ள அனைத்து தகவல்களையும் கட்டுச்சர தொழில்நுட்பம் (Blockchain Technology) மூலம் ஒருங்கிணைத்தால் எந்த விதைகள் எல்லாம் சிறந்த முறையில் விளைந்திருக்கின்றன, எந்த நிலங்கள் சிறந்த விளைச்சலை கொண்டு இருக்கின்றது என்பது வரை எல்லா விசயங்களையும் நாம் முன் கூட்டியே கணித்திடமுடியும்

நாங்கள் நடத்திவரும் விவசாயம் தளத்தின் மூலம் சமீபத்தில் எடுத்தக் கருத்துகணிப்பில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நாளைக்கு 50 லிட்டர் தண்ணீர் துணி துவைப்பதற்கு செலவிடுடப்படுகிறது. இந்த தண்ணீரை மீண்டும் நாம் மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாது. ஏனெனில் துணி துவைக்க டிட்டர்ஜெண்ட் பவுடரை பயன்படுத்ததுவதால். ஒரு வீட்டுக்கு 50 லிட்டர் தண்ணீர் எனும்போது தமிழகம் முழுக்க குறைந்த பட்சம் 3 கோடி லிட்டர் தண்ணீர் வீணாகிறது. ஒரு நாளைக்கு இவ்வளவு தண்ணீர் வீணாகும்போது ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு என பார்த்தால் நமக்குத் தெரிந்தே தண்ணீர் வீணாகிறது. இவைகள் அனைத்தையும் தரவு அறிவியல் துணைக்கொண்டு மக்களிடையே கொண்டு சேர்க்க வேண்டியது அவசியம்.

குறிப்பு

இந்த ஆய்வை மேற்கொள்ள ஜெர்மனியில் இருந்து சில உணர்விகளை தருவித்திருந்தோம். அந்த உபகரணங்கள் சரியான நேரத்தில் வந்து சேராததால் நாங்கள் திட்டமிட்டிருந்த திட்டத்தினை மட்டும் இங்கே கொடுத்திருக்கிறோம். உபகரணங்கள் வந்தபின்னர் இந்த ஆய்வு முழுவீச்சுடன் தொடரப்பட்டு இதன் முடிவுகள் அடுத்த மாநாட்டில் சமர்பிக்கப்படும்

Resources

1. http://www.homemade-circuits.com/2014/03/simple-automatic-plant-watering-circuit.html
2. http://www.instructables.com/id/DIY-an-Automatic-Plant-Watering-Device/ http://www.indiaspend.com/cover-story/63-million-indians-without-clean-drinking-water-population-of-australia-sweden-sri-lanka-bulgaria-13088

பிராந்திய மொழியை பயன்படுத்தி இலத்திரணியல் வணிகத்தினை மேற்கொள்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள். இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பான ஆய்வு.

செ. ஜெயபாலன் [1], இ. ரோகினி [2]

[1]. உயர்தொழில்நுட்பக் கல்விநிறுவகம், கோவில்குளம் ஆரயம்பதி மட்டக்களப்பு

(Advanced Technological Institute, Kovilkulam, Arayampathi, Batticaloa)

[2]. புனித சிசிலியாஸ் தேசிய பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு

(BT/St/Cecilia's Girls National School, Batticaloa)

jeyapalanps@yahoo.com, @ rasaratnamrohini@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இணைய வணிகத்தின் ஊடாக புதிய மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தல் என்பதனை பிரதான இலக்காக கொண்டு பிராந்திய மொழியை பயன்படுத்தி இலத்திரணியல் வணிகத்தினை மேற்கொள்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள். எனும் இவ் வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தினை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான மாறிகளாக தனிப்பட்ட காரணிகள், மனப்பான்மையுடன் தொடர்புடைய மாறிகள்,தொழிநுட்பத்துடன் தொடர்புடை மாறிகள்,கட்டமைப்பு மாற்றத்துடனான மாறிகள் என நான்கு சுதந்திர மாறிகளாகக் கொண்டு நிலைத்துநிற்கும் தமிழ் மொழிரீதியிலான இணைய வணிக சேவைமையங்களின் வெற்றி என்ற சாந்த மாறியினையும் ஆய்வு மாதிரியாக கொண்டு. இவ்வாய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டதின் கிராமப்புற உற்பத்தியாளர்கள், பிரதேச செயலகப்பிரிவுகளில் தொழிற்படும் பொருளாதார ஈடுபாடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் சாதாரண நுகர்வோர் போன்றோரிடமிருந்து இவ்வாய்வுக்கு தேவையான பச்சைத் தரவுகள் வினாக்கொத்து, மற்றும் நேர்முகப் பரீட்சை அட்டவணைகள் மற்றும் அவதானிப்பு அட்டவணைகள் என்பவற்றைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமிருந்து படையாக்கப்பட்ட மாதிரியினைப் பயன்படுத்தி100 பேர் ஆய்வுற்கு உட்படுத்தப்பட்டனர். சேகரிக்கப்பட்ட தரவுகள் தொகைரீதியாகவும், பண்புரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது

இவ்வாய்வானது பின்வரும் முடிவுகள் கண்டறியப்பட்டதுவணிக அபிவிருத்தி நோக்கம் கருதி பிரதேச செயலகங்ளில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதா ாிகளுள் 85 வீதமான பட்டதா ாிகள் கலைப்பாிவு பட்டதாிகள் ஆவர் இவர்களிடத்தில் வியாபாரம் சம்மந்தமான அறிவு குறைவாகக் காணப்படுகின்றது.

இணைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதில் 55 வீதமான பங்களிப்பு காணப்படுகிறது, இணைய வணிகம் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. தமிழ் மொழியில் இணைய வணிகத்தளத்தில் தரவேற்றப்படுவதனை 79 வீதமானவர்கள் ஆதரிக்கின்றனர். நேரலைக் கட்டளைகளுக்கு சௌகரிகமாக பொருள் வழங்கீடு செய்யக்கூடிய வசதிகள் இருப்பதாக 29 வீதமானவர்களே உடன்படுகின்றனர். குறுஞ் செய்திச் சேவையில் மேம்படுத்தல் தகவல்கள் வழங்கப்படுவதனை 35 வீதமானவர்களும் சமுகவலைத்தளங்களில் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனை 67 வீதமானவர்களும் உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றனர். இலவசமாக இணைய வணிக செயற்பாடுகளை தமிழ் மொழியில் கிராமப்புற உற்பத்தியாளர்கள் சார்பாக மேற்கொள்ளும் பொருளாதார ஈடுபாடுகளுடன் தொடர்புடைய ஊழியர்களின் மனப்பான்மை மாறிகளின் தொடர்புறு குணகம் 0.4 ஆக காணப்படுவதனை ஆய்வு வெளிப்படுத்துகின்றது.இது தமிழ் மொழி மூலமான இணைய வணிக பொருளாதார சேவைகள் மையங்களின் வெற்றிக்கும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு ரீதியிலான மனப்பான்மைக்குமிடையில் நேரான உறவு உள்ளதனை வெளிப்படுத்துகின்றது. தொழில் நுட்ப மாறிகளின் ஏற்றுக்கொள்ளலுக்கும் மையத்தின் வெற்றிக்குமிடையில் 0.25 இணைவுக் குணகம் காணப்படுவதுடன் கட்டமைப்பு ரீதியியாலான மாறிகளின் ஏற்றுக்கொள்ளலுக்கும் மையத்தின் நிலைத்துநிற்கும் வெற்றிக்குமிடையில் 0.12 எனும் மிகவும் நலிந்த ஆனால் சாதகமான இணைவுக் குணகம் காணப்படுவதனை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. வெளிநாட்டு இணைய வணிக இணையத்தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் சந்தைப்படுத்தலில் மோகம் கொண்டு அந்நியச் செலாவணிகளை இழக்கும் எமது இன்றைய சமுகம் பணத்தினை மாத்திரமல்ல தமிழையும் பொருளாதாரத்தினையும் இழப்பதனைத் தடுப்பதற்கு இவ்வாறான இலவச இணைய வணிக பொருளாதார சேவைகள் மையங்கள் கிராமப்புறம் சார்ந்ததாக நலிவுற்ற கிராம உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு அருகிலிருந்து தொழிற்படவேண்டியதும் அச்சேவைகளில் ஈடுபடும் ஊழியர்களின் அர்ப்பணிப்பினை உயர்த்துவதற்கு சிறந்த ஊக்குவிப்புக்களை அரச மற்றம் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்க முன்வரவேண்டும் என்பதனையும், அரசு ஒரு அலகாக இந்த இணைய வணிக மையத்தினை தமது அரச கட்டமைப்புக்குள் ஏற்றுக்கொண்டு கிராம மட்ட உற்பத்தியாளர்களுக்கு தொடர்ச்சியான விழிப்புணர்வு பயிற்சிகள் தொழில்நுட்ப உதவிகள் கணினிமயப்படுத்தப்பட்ட ஒரு மெய்யிலி நிறுவன அமைப்பினை உருவாக்குவதில் மிகுந்த ஈடுபாடு காட்டவேண்டும் என்பதனையும் சரியான வேறுபடுத்தல் தந்திரோபாயங்களையும், பணபரிமாற்றல் வழிமுறைகளிலும், உரிய பொதியமைத்தல் செயற்பாடுகளில் மாற்றங்களை கிராம மட்ட உற்பத்தியாளர்கள் கொண்டிருக்க வேண்டியதையும் இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

பிரதான சொற்கள்
எண்ணிமப் பொருளாதாரம், மனப்பான்மை, கட்டமைப்பு மாற்றம்

1.0 அறிமுகம்

பிரதேசம் ஒன்றின் அபிவிருத்தியிலும், மனிதர்களின் வாழ்க்கைத்தர உயர்விலும் வணிக முயற்சியாண்மைச் செயற்பாடுகள் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. புரட்சிகரமாக மாறிக்கொண்டிருக்கும் இன்றைய எண்ணிமப் பொருளாதார காலகட்டத்தில் இலங்கை போன்ற காலணித்துவத்திற்கு உட்பட்ட அபிவிருத்தி-யடைந்துவரும் நாடுகளில் செம்மொழியாம் தமிழ் மொழியை மாத்திரம் பேச்சு மற்றும் எழுத்து மொழிகளாக பயன்படுத்தும் பிரதேசங்களின் கிராமப்புற விவசாயிகள், பாரம்பரிய சிறு உற்பத்தியாளர்கள் தாரளமாயமாக்கப்பட்டுள்ள உலகசந்தையில் உள்நுளைந்து அவர்களாகவே தமது உற்பத்திப் பொருட்களை வழங்கீடு செய்வதில் ஒரு இலாபகரமான சந்தைப்படுத்தல் சேவையினை மேற்கொள்ளவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 99வீதமானவர்கள் தமிழ் பேசுபவர்கள். இலங்கையின் பொருளாதாரத்திற்கு அம்பாறை,திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் 6 வீத மத்தியவங்கி அறிக்கை 2015) பங்களிப்பினை மாத்திரம் வழங்கும் அதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் 1.2 வீத பங்கினையே வழங்குகிறது. மேலும் நாட்டின் வறுமையிலும் முன்னணி மாவட்டமாக இது காணப்படுகின்றது.

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் 14 பிரதேச செயலகப் பி ாிவுகளிலும் பொருளாதார ஈடுபாடுகளுடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மொழி மூலமான இணைய வணிக பொருளாதார சேவைகள் மையங்கள் (www.easbatti.org, www.harisarisale.com) ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும், அவை எதிர்நோக்கும் சவால்களையும் கண்டறிந்து. உரிய விரிவுபடுத்தல் தந்திரோபாயங்களை முன்வைப்பதன் மூலம் உலக சந்தைநோக்கிய மட்டக்களப்பின் கிராம மட்ட உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தத் துண்டுவதுமாகும்.

ஆய்வின் துணை நோக்கமாக ஒரு புதிய வணிக ஆலோசனை சேவை மாதிரி ஒன்றினை இலங்கையின் அரச நிர்வாக கட்டமைப்புக்குள் உள்வாங்கக் கூடிய விதத்தில் அபிவிருத்தி செய்து முன்மொழிதலாகும்.

1.1 ஆய்வுப் பிரச்சனை

செம்மொழியாம் தமிழ் மொழியை மாத்திரம் பேச்சு மற்றும் எழுத்து மொழிகளாக பயன்படுத்தும் பிரதேசங்களின் கிராமப்புற விவசாயிகள், பாரம்பாரிய சிறு உற்பத்தியாளர்கள் தாரளமயமாக்கப்பட்டுள்ள எண்ணிமப் பொருளாதாரத்தில் இலத்திரனியல் வணிகத்தின் ஊடாக உலகசந்தையில் உள்நுளைந்து அவர்களாகவே

தமது உற்பத்திப் பொருட்களை வழங்கீடு செய்வதிலும் இலாபகரமான சந்தைப்படுத்தல் சேவையினை வழங்குவதிலும் பின்நிக்கின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடாடர்பில் போதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதும் இதுதொடர்பான தகவல் இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது இவ்வாய்வானது இத் தகவல் இடைவெளிப்பிரச்சினைக்கு ஒரு பாலமான நோக்கங்களை நோக்கி நகர்கின்றது.

1.2 ஆய்வின் முக்கியத்துவம்

பிராந்திய மொழிகளை இணைய வணிகத்தில் பயன்படுத்துவதானது அம்மொழி வணிக மொழியாக வளர்வதற்கும் மொழிச் சொந்தக்காரர்கள் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும் வாய்ப்பாக அமையும். இல்லையெனில் தமது பிரதேசங்களுக்குள் மாத்திரம் தமது உற்பத்திகளை வழங்கும் ஒரு குறும்பார்வைச் சந்தைப்படுத்துணர்களாக இவர்கள் அடையாளப்படுத்தப்படுவதுடன் உலக சந்தையில் இவர்கள் நுழையாது இடைத்தரகர்களுக்கு வெறும் மூலப்பொருள் வழங்குணர்களாகவும் எந்தவித பெறுமதி சேர்நடவடிக்கையிலும் ஈடுபடாதவர்களாகவும் காணப்படுவர்.இது ஒரு நலிவடையும் கூலி சமுதாயமாக இவர்களை மாற்றிவிடும். இவ்வாய்வானது கிராம மட்டத்தில் வேறு எந்த மொழி அறிவுமற்ற ஒரு மொழிச்சொந்தக்காரர்களின் வணிக உற்பத்திப் பொருட்களை அதே மொழிபேசும் உறவுகளுக்கு இணைய வணிகத்தில் இணைத்து உலகம் முழுவதிலும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இவ்வாய்வு ஆய்வு செய்ய முனைவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆய்வின் துணை நோக்கமாக ஒரு புதிய வணிக ஆலோசனை சேவை மாதிரி ஒன்றினை இலங்கையின் அரச நிர்வாக கட்டமைப்புக்குள் உள்வாங்கச் செய்யவேண்டியதன் அவசியத்தினை உணரச்செய்து அதற்கான மாதிரி ஒன்றினை எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அபிவிருத்தி செய்து முன்மொழிதலாகும்.

எனவே இவ்வாய்வானது எதிர்காலத்தில் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வர்களுக்கு ஒரு அடிப்படையினை ஏற்படுத்திக்கொடுப்பதுடன், பல்வேறுபட்ட வணிக பங்காளர்கள் மற்றும் கொள்கைவகுப்பவர்கள், மாணவர்கள் நுகர்வோருக்கு மிகுந்த பயனுள்ளதாகவும் அமைவதால் கலத்தின் தேவையான ஒரு ஆய்வாக இது அமைகின்றது.

1.3 ஆய்வின் பொதுவான நோக்கம்

மாற்றத்தின மூலக்கூறுகளான தனிப்பட்ட காரணிகள், மனப்பாங்கு,கட்டமைப்பு, மற்றும் தொழில்நுட்பம், போன்ற காரணிகளுக்கும் நிலைத்திருக்கும் இணைய வணிக அலகுகளின் வெற்றிக்கும் இடையிலான உறவினை கண்டுகொள்ளல்.

1.3.2 ஆய்வின் குறிப்பிடத்தக்க நோக்கங்கள்

1. பொருளாதாரஆலோசனை சேவை அலகு வெற்றியை நோக்கி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மனநிலையை கண்டறிதல்
2. பொருளாதார ஆலோசனை சேவைஅலகு வெற்றியைசெல்வாக்கு செலுத்தும் கட்டமைப்பு காரணிகளை கண்டறிதல்
3. பொருளாதார சேவை அலகு வெற்றியை நோக்கி தொழில்நுட்ப காரணிகளின் அளவை கண்டறிதல்
4. பொருத்தமான சிபா ா சுகளை முன்வைத்தல்

2.0 வரலாற்று முன்னாய்வுகள்

அன்றாடம் மாற்றமடையும் வணிக உலகமயமாதலில் சரியான பிரயோகங்களை வணிகத்தில் மேற்கொள்வதற்கு மொழித்திறன் அவசியமாகும். எந்த தனித்துவமான தாய் மொழியும் உலகத்தின் பொதுவான மொழியாக கொள்ளப்படுவது கிடையாது. டுக்கன்(2007) நிறுவனங்களுக்கிடையில் சாதகமான விளைவு மாற்றங்களுக்கும் வணிக வெற்றிகளும் எற்படுவதற்கு பெறுமதிசார் மொழித்திறனும் கலாச்சார ஊக்குவிப்புக்களும் மிகவும் அவசியமானது என சுட்டிக்காட்டுகின்றார்ஹெர்மான். (2007), ஒரு மேம்பட்ட மொழித்திறனானது "

வெற்றிகரமானஉள்ளூர்தயாரிப்புகளைஉருவாக்கஅல்லது மேம்படுத்துவதற்கு, வாடிக்கையாளர்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் பங்காளிகளிடையே புரிந்துணர்வின் முழு சுற்றுச்சூழல்தேவை. வாடிக்கையாளர்களுடனும், சமூகங்களுடனும், கூட்டாளிகளுடனும் உள்ள நம்பகமான உறவுகளுக்கு வழிவகையாக அமையும் எனக் குறிப்பிடுகின்றார்" எலிசபெத். (2007) "வெளிநாட்டு சந்தைகளில் அமெரிக்க பங்கு அதிகரிப்பதற்கு அமெரிக்க வணிகர்களிடையே மொழிதிறமை இல்லாதது ஒரு பெரிய தடை ஆகும்" மேம்படுத்தப்பட்ட பொதுவான மொழிகள் தொழில்சூழலைப் பற்றியும், உற்பத்தி, மூலப்பொருட்களின் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகம் பற்றிய புதிய யோசனையையும் இயல்பான எண்ணங்களை உருவாக்கி சிறந்த தகவலை பெற உதவுகின்றன. சேனல்கள் ஒரு மொழிமூலோபாயம் கொண்டிருப்பதோடு, உள்ளூர் மொழி பேசும்மொழி, திறமை வாய்ந்த பணியாளர்கள் மற்றும் நிபுணத்துவ மொழிபெயர்ப்பாளர்களின் கலவையைப் பயன்படுத்தி வணிகவெற்றியை கணிசமான அளவில் அதிகரிக்கும்.

ஹார்வர்ட்வணிகஆய்வு (2013) நாடுகளின் தேசிய வருமானத்திற்கும் ஆங்கில மொழித்தினுக்கு-மிடையில் ஒரு வலுவான இணைவுக்குணகம் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் 90 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள தமிழர்கள் அத்துடன் கிராமட்ட உற்பத்தியாளர்களில் 80 வீதத்திற்கும்

மேற்பட்டவர்களுக்கு தமிழைத்தவிர எந்தவிதமான மொழியாற்றலும் இல்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

2.1 மனப்பாங்குமாற்றம்

ஆட்ஜூமன் (2014: 187) மின்வணிகத் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பங்களை நோக்கி ஊழியரக்ளின் மனோபாவம் தொடர்புடையதாக இருப்பதைக் கண்டறிந்தார், ஜெயலனி மற்றும் பலர், 2009: 54) போன்ற காரணிகளால் பாதிக்கப் படலாம். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது, பணியாளர்களின் (மஹாதா&யங்லெசன், 2013: 75) ஒரு நல்ல அறிவுத்தளத்தை அடிப்படையாகக் கொண்டது. தொழில் நுட்பத்தில் தொழில் நுட்ப நிபுணத்துவம் தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்வதற்கும், திறமையுடன் நிறுவனங்களுக்கிடையில் பயன்படுத்தப்படுவதற்கும் நீண்ட காலமாக செல்லலாம். கபோக்லோ மற்றும் பலர். (2011: 56) தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி பணியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியிலான திறன்கள் முக்கியம் என்பதையும் நிறுவனங்களின் குறிக்கோள்களை சந்திப்பதில் உயர்மட்ட முகாமைத்துவத்தின் முயற்சியை ஆதரிப்பதும் முக்கியமானதாகும்.

தொழில்நுட்ப திறன்களைக் கொண்டுள்ள பணியாளர்கள் எப்போதும் வணிக வளர்ச்சிக்கான ஆசைகளை வெளிப்படுத்தும் நிறுவனங்களை (புதுடோகன் & பேங்கோல், 2016, கௌகாக்லூ மற்றும் பலர், 57: 57) விரும்புகின்றனர்..

2.2 கட்டமைப்பு ரீதியான மாற்றம்

சிகர் மற்றும் பலர். (2003) 1978 முதல் 1995 வரை தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் இக்காலப்பகுதியில் 17 வீதமான வளர்சிக்கு காரணம் கட்டமைப்பு மாற்றம் என சுட்டிக்காட்டுகின்றனர்.மேலும் மாக்மில்லன் மற்றும் ரோட்ரிக் (2011) சீனாவின் ஒட்டுமொத்த உழைப்பு உற்பத்தித்திறனுக்கான கட்டமைப்பு மாற்றம் மற்றும் உள்ளக உற்பத்தித்திறன் வளர்ச்சியின் பங்களிப்பை சுட்டிக் காட்டுகின்றனர்.

சில்வா (2016) தொழில்அனுபவம், தொடர்பு, ஆர்வம், திட்டமிடல், கண்டுபிடிப்பு, சந்தை மற்றும் ஆராட்சிச்செலவு, சந்தைநோக்கம், வியாபாரக் குறி, அங்கீகாரம், நம்பகத்தன்மை, வலயமைப்பு, நிதி ஆதாரங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்டம் என்பன இலங்கையின் தொழிற்துறை ஆரம்ப நிலைக்கான வெற்றிகரமான காரணிகள் எனக் குறிப்பிடுகின்றார்

.

2.3 தொழில்நுட்ப காரணிகள்

(டோர்னட்ஸ்கி & க்ளீன், 1982) நிறுவனமொன்று இது தமக்கு மிகப்பொருத்தமான தொழில்நுட்பந்தான் என கண்டுகொண்ட உடன் போட்டியாளருக்கு மன்னர் அதனை உள்வாங்கவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். (ஜு&க்ரேமர், 2005: 65) வியாபார நடவடிக்கைகளுடன் அதிகரித்த உற்பத்தித்திறன் மற்றும் மேம்பாட்டு செயல்திறனைப் பற்றி அறிமுகப்படுத்தும் ஒரு தொழில்நுட்பத்தை தொழில்நுட்பம் தத்தெடுக்கும்போது, தற்போது இருக்கும் மற்றும் சாத்தியமான சிக்கல்கள் தீர்க்கப்பட வாய்ப்புள்ளது என சுட்டிக் காட்டுகின்றார்.

Wanjau et al. (2012: 76) கூற்றுப்படி, வளரும் பொருளாதாரங்களில் சிறிய நடுத்தரளவு நிறுவனங்கள் இலத்திரணியல் வர்த்தக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் மெதுவாக இருந்து வருகின்றன. இது தொழில்நுட்பத்திலிருந்து பெறப்படும் சாத்தியமான நன்மைகளைத் தவிர. சிறிய நடுத்தரளவு நிறுவனங்கள் இலத்திரணியல் வர்த்தக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் மெதுவாக செயல்படுகின்றன என்பதை பல்வேறு ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.

3. ஆய்வு முறை

பிரதேச செயலகப்பிரிவுகளில் தொழிற்படும் பொருளாதார ஈடுபாடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அரச அதிகாரிகள் சாதாரண நுகர்வோர் போன்டமிருந்து இவ்வாய்வுக்கு தேவையான பச்சைத் தரவுகள் வினாக்கொத்து, மற்றும் நேர்முகப் பரீட்சை அட்டவணைகள் மற்றும் நேரடி அவதானிப்பு என்பவற்றைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமிருந்து படையாக்கப்பட்ட மாதிரியினைப் பயன்படுத்தி 100 பேர் ஆய்வுற்கு உட்படுத்தப்பட்டனர். சேகரிக்கப்பட்ட தரவுகள் தொகைரீதியாகவும், பண்புரீதியாகவும் ஒப்பீடுகள், சராசரிகள், அட்டவணைகள், சட்டவரைபுகள் விளக்கம் வியாக்கியானம், தொடர்புறுகுணகம், தொடர்புப்போக்குப்பகுப்பாய்வு கணிதரீதியிலான நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாராட்சியானது பின்வரும் கண்டறிதல்களை வெளிப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது. ஆய்விற்கான வினாக்கொத்தானது நான்கு பிரிவுகளாக 27 வினாக்களைக் கொண்டிருந்தது இவ் 37 வினாக்களில் 09 வினாக்கள் தனிப்பட்ட தகவல்களைத் திரட்டவும் 15 வினாக்கள் மனப்பாங்குமாற்றம், தொழில்நுட்ப மாற்றம் மற்றும் கட்டமைப்பு மாற்றம் போன்ற மாற்ற காரணிகளின் மாறிகளை அடிப்படையாக் கொண்டிருந்ததுடன் 3 வினாக்கள் தமிழ் மொழிமூலமான இணைய வழி பொருளாதார ஆலோசனை மையங்களின் வெற்றியினை மதிப்பிடவும் பயன்படுத்தப்பட்டது. ஆய்வானது முன்னாய்வுகளை மதிப்பிடல் மற்றும் பரிசோதனை முறையான தன்மையில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆய்வுக்கு தேவையான தரவுகள் முதல்தர மற்றும் இரண்டாந்தர மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.மேலும் ஆய்வானது சமுக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் மென்பொருளினை(SPSS16.0) பயயன்படுத்தி அட்டணைகள் மற்றும் வரைபடங்கள்

மற்றும் இணைவுக்குணக மற்றும் காரணி ஆய்வுகளைப் பயன்படுத்தி ஆய்வு மாதிரிக்கு ஏற்றால் போல் மாறிகளுக்கிடையிலான தொடர்பு ஆய்வு செய்யப்பட்டது.

4.0 தரவுப் பகுப்பாய்வு

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 போில் ஆண்கள் 54 வீதமாகவம் பெண்கள் 46 வீதமாகவும் காணப்படுகின்றனர் அத்துடன் பதிலளித்தவர்களில் 30 வயதுக்கும் குறைந்தவர்கள் 10 வீதமாகவும் 30 -39 வயதுக்கு உட்பட்டவர்கள் 60 வீதமாகவும் 40-49 வயதுக்கு உட்பட்டவர்கள் 25 வீதமாகவும் 50-60 வயதுக்கு உட்பட்டவர்கள் 3 வீதமாகவும் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் 2 வீதமாகவும் காணப்படுகின்றனர். இதிலிருந்து பொருளாதார சேவைநிலைய உத்தியோகத்தர்களின் அதிகமானவர்கள் ஆண்களாக இருப்பதுடன் இவர்களில் அதிகமானவர்கள் 30-39 வயதிலும் காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

85 வீதத்திற்கும் மேல் கலைப்பிரிவுப் பட்டதாரிகளே பொருளாதார ஈடுபாடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களாக வணிக அபிவிருத்தி நோக்கம் கருதி பிரதேச செயலகங்களில் நியமிக்கப்ட்டுள்ளனர்.இணைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதில் 55 வீதமான பங்களிப்புக் காணப்படுவதாகவும், இணைய வணிகம் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் குறைந்த மட்டத்திலிருப்பதனை ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. தமிழ் மொழியில் இணைய வணிகத்தளத்தில் தரவேற்றப்படுவதனை 79 வீதமானவர்கள் ஆதரிக்கின்றனர்.நேரலைக் கட்டளைகளுக்கு சௌகரிகமாக பொருள் வழங்கீடு செய்யக்கூடிய வசதிகள் இருப்பதாக 29 வீதமானவர்களே உடன்படுகின்றனர். குறுஞ் செய்திச் சேவையில் மேம்படுத்தல் தகவல்கள் வழங்கப்படுவதனை 35 வீதமானவர்களும் சமுகவலைத்தளங்களில் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனை 67 வீதமானவர்களும் உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றனர்.

அட்டவணை: 4.1 மனப்பாண்மை காரணிகளுக்கும் பொருளாதார சேவை மையங்களின் வெற்றிக்கும் இடையிலான தொடர்பு

மாறி		வெற்றி மட்டம்
மனப்பாங்கு	பியசன் இணைவுக் குணகம்	.40**
	முக்கியத்துவம். (2-வால்)	.000
*. 0.05 மட்டத்தில் இணைவுக்குணமக் முக்கியம் வாய்ந்தது (2-வால்).		

மூலம் ஆய்வுத் தரவுகள்

வெற்றிவிகிதம் மற்றும் மனப்பாண்மைக் காரணிகளுக்கு இடையிலான நெகிழ்வான தொடர் புகுணகம் 0.40 ஆகும் மற்றும் இது 0.01 நிலை அளவில் புள்ளியியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

எனவே வெற்றிவிகிதம் மற்றும் மனப்பாண்மைக காரணிகள் இடையே மிதமான உறவு உள்ளதனை ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. தமிழ் மொழி மூலமான இணைய வணிக பொருளாதார சேவைகள் வழங்குகின்ற இவ்வகையான இணைய மையங்களின் வெற்றிக்கும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு ரீதியிலான மனப்பான்மைக்குமிடையில் நேரான உறவு உள்ளதென்பது இவ்வாறான மக்களக்கு அருகில் இலவசமாக அவர்களது கிராமத்து உற்பத்திகளை மக்கள் நலன்கருதி சந்தைப்படுத்தக்கூடிய செயற்பாட்டிற்கு ஒரு உந்து கோலாகக் காணப்படுகின்றது.

அட்டவணை: 4.2 தொழில்நுட்பக் காரணிகளுக்கும் பொருளாதார சேவை மையங்களின் வெற்றிக்கும் இடையிலான தொடர்பு

மாறி		வெற்றி மட்டம்
தொழில் நுட்பம்	பியசன் இணைவுக் குணகம்	.250**
	முக்கியத்துவம். (2-வால்)	.000
*. 0.05 மட்டத்தில் இணைவுக்குணமக் முக்கியம் வாய்ந்தது (2-வால்).		

மூலம் ஆய்வுத் தரவுகள்

வெற்றிமட்டம் மற்றும் தொழில் நுட்பக் காரணிகளுக்கு இடையிலான நெகிழ்வான தொடர்பு குணகம் 0.250 ஆகும் மற்றும்இது 0.01 நிலை அளவில் புள்ளியியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கு காணப்படும் பலவீனமான சாதகமான உறவு இணைய பொருளாதார சேவை மையங்களில் மேற்கொள்ப்படவேண்டிய தொழில்நுட்ப ரீதியிலான மேம்படுத்தல்களை சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது.

அட்டவணை: 4.3 கட்டமைப்புகாரணிகளுக்கும் பொருளாதார சேவை மையங்களின் வெற்றிக்கும் இடையிலான தொடர்பு

மாறி		வெற்றி மட்டம்
கட்டமைப்பு	பியசன் இணைவுக் குணகம்	.120**
	முக்கியத்துவம். (2-வால்)	.000
*. 0.05 மட்டத்தில் இணைவுக்குணமக் முக்கியம் வாய்ந்தது (2-வால்).		

மூலம் ஆய்வுத் தரவுகள்

0.120 இணைவுக் குணகம் காணப்படுவதுடன் கட்டமைப்பு ரீதியியாலான மாறிகளின் ஏற்றுக் கொள்ளலுக்கும் மையத்தின் நிலைத்துநிற்கும் வெற்றிக்குமிடையில் 0.120 எனும் மிகவும் நலிந்த ஆனால் சாதகமான இணைவுக் குணகம் காணப்படுவதனை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. சரியான ஒரு கட்டமைப்பின் தேவையினை இது வெளிப்படுத்துவதுடன் கட்டமைப்பு ரீதியிலான ஒரு மாற்றத்திற்கு இவ் வணிக பொருளாதார சேவை மையங்கள் உள்வாங்கப்பட வேண்டிய தேவையினை இது சுட்டிக்காட்டுகின்றது.

5.0 ஆய்வுப் பரிந்துரை மற்றம் முடிவு

வெளிநாட்டு இணைய வணிக இணையத்தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் சந்தைப்படுத்தலில்தந்திரோபாயங்களில் மோகம் கொண்டு அந்நியச் செலாவணிகளை இழக்கும் எமது இன்றைய சமுகம் பணத்தினை மாத்திரமல்ல தமிழையும் பொருளாதாரத்தினையும் இழப்பதனைத் தடுப்பதற்கு இவ்வாறான இலவச இணைய வணிக பொருளாதார சேவைகள் மையங்கள் கிராமப்புறம் சார்ந்ததாக நலிவுற்ற கிராம உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு அருகிலிருந்து தொழிற்படவேண்டியதது காலத்தின் கட்டாயமாகும். என்பதனை ஆய்வின் சாரா மாறிகளான மனப்பாங்கு,தொழில்நுட்பம் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான காரணிகளுக்கும் சார்ந்த மாறியான தமிழ் மொழி மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகப்பிரிவுகளில் தொழிற்படும் இணைய வணிக பொருளாதார ஆலோசனை சேவை மையங்களுக்கும் இடையில் நேரான இணைவுக்குணகங்களின் சேர்வைகள் சுட்டிக்காட்டுகின்றது அச்சேவைகளில் ஈடுபடும் ஊழியர்களின் அர்ப்பணிப்பினை உயர்த்துவதற்கு சிறந்த ஊக்குவிப்புக்களை அரச மற்றம் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்க முன்வரவேண்டும் என்பதனையும், அரசு ஒரு அலகாக இந்த இணைய வணிக மையத்தினை தமது அரச கட்டமைப்புக்குள் ஏற்றுக்கொண்டு கிராம மட்ட உற்பத்தியாளர்களுக்கு தொடர்ச்சியான விழிப்புணர்வு பயிற்சிகள் தொழில்நுட்ப உதவிகள் கணினிமயப்படுத்தப்பட்ட ஒரு மெய்யிலி நிறுவன அமைப்பினை உருவாக்குவதில் மிகுந்த ஈடுபாடு காட்டவேண்டும் என்பதனையும் சரியான வேறுபடுத்தல் தந்திரோபாயங்களையும், பணபரிமாற்றல் வழிமுறைகளிலும், உரிய பொதியமைத்தல் செயற்பாடுகளில் மாற்றங்களை கிராம மட்ட உற்பத்தியாளர்கள் கொண்டிருக்க வேண்டியதையும் இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

Bibliography

1. Ali, M. & Kurnia, S. 2011. Interorganizational Systems (IOS) adoption in the Arabian Gulf region: The case of Bahraini grocery industry. Journal of Information Technology and Development, 17 (4) (2011), pp. 253–267
2. Ardjouman, D. 2014. Factors influencing small and medium enterprises (SMEs) in adoption and use of technology in Cote d'Ivoire. International Journal of Business and Management, 9(8):179-190.

3. Annenberg Center for Communication, University ofSouthern California, Los Angeles, California, (1999), Conference on Issues in Global Electronic Commerce.
4. Arpaci, I., Yardimci, Y.C., Ozkan, S. & Turetken, O. 2012. Organizational adoption of information technologies: A literature review. International Journal of eBusiness and e-Government Studies,4(2):37
5. Chan, S. & Lu, M. 2004. Understanding internet banking adoption and use behaviour: A Hong Kong perspective. Journal of Global Information Management, 12(3):21-43.
6. Curry, J.P., Wakefield, S.D., Price, J.L. & Mueller, C.W. 1986. On the causal ordering of job satisfaction and organisational commitment source. The Academy of Management Journal, 29(4):847-858.
7. Dahnil, M.I., Marzuki, K.M., Langgat, J. Fabeil, N.F. 2011. Factors influencing SMEs adoption of social media marketing. Procedia- Social and Behavioural Sciences, 148(1):119-126.
8. Dakora, E.A.N, Bytheway, A.J. & Slabbert, A. 2010. The Africanisation of South African retailing: A review. African Journal of Business Management, 4(4).
9. Dauda, Y.A. & Akingbade, W.A. 2011. Technology change and employee performance in selected manufacturing industries in Lagos state of Nigeria. Australian Journal of Business and Management Research, 1(5):32-43.
10. Dlodlo, N. & Dhurup, M. 2010. Barriers to e-marketing adoption among small and medium enterprises (SMEs) in the Vaal Triangle. Acta Commercii, 164-180.
11. Hough, J., Thompson, A.A., Strickland, A.J. & Gamble, J.E. 2011. Crafting and executing strategy: Creating sustainable high performance in South African businesses. Berkshire: McGraw-Hill.
12. Mahadea, D. & Youngleson, J. 2013. (Eds). Entrepreneurship and small business management. Cape Town: Pearson Education.
13. Maholtra, N.K. 2010.Marketing research: An applied orientation. 6th edition. New York: Pearson Education.
14. Wanjau, K., Macharia, N.R. & Ayodo, E.M.A. 2012. Factors affecting adoption of electronic commerce among small-medium enterprises in Kenya: Survey of tour and travel firms in Nairobi. International Journal of Business Humanities and Technology, 2(4):76-91.

15. Yaghoubi, N.M. & Bahmani, E. 2010. Factors affecting the adoption of online banking. International Journal of Business and Banking, 5(9):150-165; Srilanka Central Bank report 2012,2013, 2014,2015,2016; Batticaloa distric Development Plan report, Eas unit reports.

தமிழ்ச் சூழலில் திறந்த இணைப்புத் தரவுக்கான மெய்ப்பொருளிய உருவாக்கம் நோக்கி

இ. நற்கீரன்
நூலக நிறுவனம்

கட்டுரைச் சுருக்கம்
தமிழ்ச் சூழலில் நினைவு நிறுவனங்கள் தமது தரவுகளை ஒரு பொது மெய்ப் பொருளியத்தைப் பயன்படுத்தி இணைப்புத் தரவாக வெளியிடும் தேவை உள்ளது. அந்த மெய்ப்பொருளியம் ரிம் பேர்னேர்ஸ்-லீ 2006 இல் முன்வைத்த கொள்கைகளுக்கு ஏற்பதாகவும், அனைத்துல சீர்தரங்களையும், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மெய்ப்பொருளியங்களைப் பயன்படுத்தியும் வடிவமைக்கப்பட வேண்டும். இந்த ஆய்வு அனைத்துலக அருங்காட்சியகங்கள் மன்றத்தின் கருத்துரு குறிப்பு மாதிரியை (CIDOC Conceptual Reference Model - சி.ஆர்.எம்) அடிப்படையாகக் கொண்டு, பரந்த பயன்பாட்டில் உள்ள டப்பிளின் கருவகம் (Dublin Core), இசுகீமா (Schema) போன்ற சொற்தொகுதிகளைப் பயன்படுத்தி எளிமைப்படுத்தப்பட்ட ஒரு மெய்ப்பொருளியத்தை முன்வைக்கிறது. இந்த மெய்ப்பொருளியம் சேகரிப்பு, படைப்பு, கருத்துருப் பொருள், பௌதீகப் பொருள், நபர், குழு, இடம், நிகழ்வு, நேரம்-காலம் ஆகிய எட்டு முதன்மை வகுப்புகளைக் கொண்டது. மேலும், இந்த மெய்ப்பொருளியத்தை ஐலண்டோரா குளோ (Islander CLAW) என்ற இணைப்புத் தரவு தளத்தில் நிறுவுவதற்கான வழிமுறையையும் விபரிக்கிறது. இவ்வாறு தகவல் வளங்களையும், அவை சுட்டும் தரவுகளையும் இணைத்துப் பகிர்வதன் மூலம் அவற்றை இலகுவாக அணுக, தேட, வினவ, பகுத்தறிய முடியும்.

குறிசொற்கள்: இணைப்புத் தரவு, மெய்ப்பொருளியம், வள விபரிப்புச் சட்டகம், எண்ணிமக் களஞ்சியம், மும்மை, மும்மைத்தரவுத்தளம்

1. முன்னுரை

உலகளாவிய வலை (World Wide Web) பாரிய தொழில்நுட்ப, சமூக, பொருளாதார புரட்சியை ஏற்படுத்தியது. ஆவணங்களை, அவற்றுக்கு இடையேயான இணைப்புக்களை உரலிகள் அல்லது வலை முகவரிகளைப் (URL) பயன்படுத்தி இணையம் ஊடாக அணுகுவதற்கான நுட்பக் கட்டமைப்பே உலகளாவிய வலை ஆகும். இதன் நீட்சியாக, அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பமாக பொருளுணர் வலை (Semantic Web) அல்லது இணைப்புத் தரவு (Linked Data) தொழில்நுட்பங்கள் விளங்குகின்றன. இணைப்புத் தரவு தொழில்நுட்பங்கள் கடந்த சில ஆண்டுகளாக

முதிர்ச்சி அடைந்துள்ளன, பரவலான பயன்பாட்டுக்கு வந்துள்ளன. நாம் எண்ணிம வளங்களை அல்லது தரவுகளை வெளியிடும் (publishing), பரிமாறும் (data exchange), ஒருங்கிணைக்கும் (integration), கண்டுபிடிக்கும் (discovery), பயன்படுத்தும் முறைகளில் பாரிய மாற்றங்களையும் வாய்ப்புக்களையும் இது கொண்டுவருகின்றது.[1] பெருந்தரவை ஒழுங்குபடுத்தவும் (structuring big data), தரவுகளைப் பகுத்தறியவும் (reasoning with data), தரவுகளைப் பற்றி துல்லியமான கேள்விகளைக் கேக்கவும், முடிவுகளை எடுக்கவும் இணைப்புத் தரவு நுட்பங்கள் உதவுகின்றன.

வலை ஆவணங்கள் உலகளாவிய வலைக்கு அடிப்படையாக அமைந்தன என்றால், இணைப்புத் தரவுக்குப் பொருட்கள் (things) அல்லது பொருட்களைப் பற்றிய விபரிப்புக்கள் அடிப்படையாக அமைகின்றன.[2] பொருட்கள் ஒரு படைப்பாக, நபராக, இடமாக, கருத்தாக, நிகழ்வாக, எதுவாகவும் அமையலாம். இந்தப் பொருட்களைப் பற்றியும், அவற்றுக்கு இடையேயான தொடர்புகளை விபரிக்கவும் பயன்படும் அடிப்படைத் தொழில்நுட்பமே வள விபரிப்புச் சட்டகம் (Resource Description Framework - RDF - ஆர்.டி.எப்) ஆகும். வள விபரிப்புச் சட்டகம் ஒரு பொருளை எழுவாய் - பயனிலை - செயற்படுபொருள் (subject-predicate-object) என்ற இயற்கை மொழி வசனத்தின் அமைப்பைக் கொண்ட கூற்றுக்களால் (statements) அல்லது மும்மைகளால் (triples) விபரிக்கிறது. ஒவ்வொரு பொருளும் ஒரு தனித்துவமான உரலியால் அடையாளம் காணப்படுகின்றது. இந்த உரலியே அவற்றை இணைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. வள விபரிப்பு மும்மைகள் மும்மைத்தரவுத்தளம் (Triplestore) ஒன்றில் சேமிக்கப்பட்டு, எசுபார்க்கிள் (SPARQL - SPARQL Protocol and RDF Query Language) போன்ற மொழிகள் ஊடாக வினவப்படலாம்.

வள விபரிப்புச் சட்டகம் எளிமையானது. ஒரு பொருளை பலர் வெவ்வேறான முறைகளில் உருவகிக்க முடியும் (represent/model) விபரிக்க (describe) முடியும். இதனால் தரவுகளைப் பகிர்வதில், பயன்படுத்துவதில் தடைகள் ஏற்பட்டன. ஒரு பொதுவான, பகிரப்படக் கூடிய அணுகுமுறை அல்லது கருத்தோற்ற முறைமை (schema) தேவை என்பது நன்கு உணரப்பட்டது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட துறை பற்றிய தரவுகளை அல்லது அறிவை உருமாதிரியாக்கப் பயன்படும் வகுப்புகள் (classes/types/sets), பண்புகள் (properties/attributes) மற்றும் உறவுகளைக் (relationships) கொண்ட சட்டகமே மெய்ப்பொருளியம் ஆகும். இணைப்புத் தரவுக்கான மெய்ப்பொருளியங்களை வள விபரிப்புச் சட்டக கருத்தேற்ற முறைமை (RDF Schema), வலை மெய்ப்பொருளிய மொழி (OWL), எளிய அறிவு ஒழுங்கமைப்பு முறைமை (SKOS) போன்ற மொழிகளைப் பயன்படுத்தி உருவாக்க முடியும். இந்த

மொழிகளைப் பயன்படுத்தி மெய்ப்பொருளியத்தையும் இணைப்புத் தரவாகவே வெளிப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச் சூழலில் எண்ணிமப்படுத்தல், எண்ணிமப் பாதுகாப்பு, எண்ணிம வளங்களை உருவாக்கும் செயற்திட்டங்கள் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மதுரைத் திட்டம், நூலக நிறுவனச் செயற்திட்டங்கள், படிப்பகம், தமிழ்க் கல்விக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இந்திய எண்ணிம நூலகம், சிங்கப்பூர் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம், தமிழ் விக்கியூடகங்கள் என்று பல செயற்திட்டங்கள் தமிழ் எண்ணிம வளங்களை அணுக்கப்படுத்துகின்றன. பிற நிறுவனங்களுக்கும் அணுக்கப்படுத்தல் பணிகளைத் தொடங்கியுள்ளன. இந்த எண்ணிம வளங்களை, தரவுகளை வளர்ந்துவரும் இணைப்புத் தரவுக் கட்டமைப்புக்கு ஏற்ற வகையில் வெளியிடுவது, கட்டமைப்பது அவசியமாகும். அவ்வாறு செய்தாலே கூகிள் தேடுபெறியில் துல்லியமாக இடம்பெறச் செய்வதில் இருந்து சிக்கலான கேள்விகளுக்கு பதிலளிக்க கூடிய வரைக்குமான பயன்களைப் பெற முடியும். இவ்வாறு பல செயற்திட்டங்கள் தரவுகளை இணைப்புத் தரவாக வெளியிட, பகிர முன்வரும் போது மெய்ப்பொருளியங்களின் தேவை எழுகிறது. மேற்சுட்டப்பட்ட நிறுவனங்கள் பாதுகாத்து அணுக்கப்படுத்தும் நூல்கள், இதழ்கள், நாளிதழ்கள், பல்லூடகங்கள், வலைத்தளங்கள், தரவுகள் உட்பட்ட எண்ணிம வளங்களையும், அவற்றோடு தொடர்புடைய பண்பாட்டு, வகைப்படுத்தல் மற்றும் பொது அறிவுத் தரவுகளையும் (classification/knowledge organization, general knowledge) ஆக்க, பகிர, பராமரிக்கத் தேவையான ஒரு மெய்ப்பொருளியத்தை உருவாக்குவதை நோக்கி இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

முதலில் இக் கட்டுரை எண்ணிம நூலகம், ஆவணகம், நினைவு நிறுவனங்களுக்குத் தேவையான மெய்ப்பொருளியத்தின் நோக்கங்களை, அதை வடிவமைப்பதில் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை விபரிக்கும். இரண்டாவது இது மெய்பொருளியத்தை வடிவமைப்பதற்குப் பயன்படும் முறையியலை (methodology) விபரிக்கும். மூன்றாவது ஒர் அடிப்படை மெய்ப்பொருளியத்தை இது விபரிக்கும். இறுதியாக இந்த மெய்பொருளியத்தை அடுத்த தலைமுறைக் களஞ்சிய மென்பொருளான ஐலண்டோரா குளோவில் (Islandora CLAW) எப்படிப் பயன்படுத்தலாம் என்று எடுத்துரைக்கும்.

2. மெய்பொருளியத்தின் தேவைகளும் நோக்கங்களும்

மெய்ப்பொருளியம் ஒரு குறிப்பிட்ட ஆய்வுத் துறையின் கருத்துருக்களையும் (concepts) அவற்றுக்கு இடையேயான உறவுகளையும் (relationships) உருவகப்படுத்த, விபரிக்க, ஒழுங்குபடுத்த உதவுகின்றது.[3] நாம் விபரிக்க முனையும் துறைகள் நூலகம்,

ஆவணகம் மற்றும் அருங்காட்சியகங்களின் அறிவுத் துறைகள் ஆகும். இவை முறையே நூல்கள், ஆவணங்கள், அரும்பொருட்களோடு தொடர்புடையவை. நாம் உருவாக்க முற்படும் மெய்ப்பொருளியம் இத் துறைகளில் பயன்படும் சிக்கலான தகவல் வளங்களை (எ.கா தொடர்கள், வலைத்தளம், கலைப்பொருள்) விபரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த வளங்களை இலகுவாகத் தேட, கண்டுபிடிக்க உதவ வேண்டும்.

மேற்குறிப்பிட்ட துறைகள் மொத்த அறிவுத்துறைகள் தொடர்பான தகவல் மூலங்களை வெளிப்படுத்தும், வகைப்படுத்தும், ஒழுங்குபடுத்தும், பகிரும் மேநிலைப் பணியில் ஈடுபட்டுள்ளன. அந்த நோக்கில் மொத்த அறிவுத் துறைகளை வகைப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் மெய்ப்பொருளியம் உதவ வேண்டும். இதனை நூலகவியலின் மரபுசார்ந்த வகைப்படுத்தல் சிக்கல் என்று குறிக்கலாம்.

தனியே ஒரு நிறுவனத்திடம் மட்டும் இருக்கும் தகவல்களை விபரிக்க, ஒழுங்கமைக்க மட்டும் அல்லாமல் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் (data exchange) செய்யவும், பலபடித்தான தகவல்களை (hetrogenous information) ஒருங்கிணைக்கவும் மெய்ப்பொருளியம் உதவ வேண்டும். இத் தகவல்களை கணினி மூலம் பகுத்தறிய (reasoning) செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் இன்றி (decentralized), ஒப்பீட்டளவில் இலகுவாக நிறைவேற்றக் கூடியதாகவும் (implementable), நீட்டப்படக் (extendable) கூடியதாகவும் இருக்க வேண்டும்.[4]

இன்னுமொரு வகையில் நோக்குவதானால் இந்த மெய்ப்பொருளியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நுட்ப கட்டமைப்பு குறிப்பான கேள்விகளுக்கு நேரடியாக, இலகுவாகப் பதில் தரக் கூடியதாக இருக்க வேண்டும். எ.கா பெரியார் எழுதிய நூல்கள் எந்தத் துறைகள் பற்றி பெரிதும் பேசுகின்றன? இந்த ஊரோடு தொடர்புடைய அரும்பொருட்கள் எவை? இந்த ஊரில் போரில் ஈழப் போரில் இறந்த மக்கள் யார்? இந்தக் கருத்துப் பற்றி தொடர்புடைய ஆக்கங்கள் எவை? இந்தத் கருத்துரு/துறைசார்ந்த எழுத்தாளர்கள் யார்? இந்த எடுத்துக்காட்டுக்கள் போன்று படைப்பு, அமைப்பு, நிகழ்வு, பொருள் என்று பல்வேறு விடயங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதில் தரக்கூடியதாக இந்த மெய்ப்பொருளியம் அமைய வேண்டும். ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த கேள்விகளுக்கு (எ.கா உயிரணுவின் பாகங்கள் எவை) இது நேரடியாகப் பதில் தர முடியாமல் இருக்கலாம். ஆனால் அந்தத் துறைசார்ந்த மெய்ப்பொருளியத்தோடு மேல்நிலையில் தொடர்புறக் கூடியதாக அமைய வேண்டும்.

3. மெய்ப்பொருளிய வடிவமைப்புக்கான கொள்கைகள்

இணைப்புத் தரவுக்கான நான்கு கொள்கைகளை உலகளாவிய வலையின் கண்டுபிடிப்பாளாரான ரிம் பேர்னேர்ஸ்-லீ 2006 இல் பின்வருமாறு முன்வைத்தார்:[5]

- தகவல் வளங்களையும் (எ.கா வலைப்பக்கம், கோப்பு, படிமம்), தகவல் அல்லா வளங்களையும் (எ.கா பொருள், கருத்து) யு.ஆர்.ஐ (URI) பெயர் கொண்டு இனங்காட்டுதல்.
- எச்.ரி.ரி.பி யு.ஆ.ஐ களைப் பயன்படுத்தல் மூலம் இந்த வளங்களைப் பற்றிய தகவல்களைக் கண்டறிய உதவுதல் (dereferencing using http)
- ஒருவர் யு.ஆர்.ஐ அணுகும் போது, பயன்படக்கூடிய தகவல்களைத் திறந்த சீர்தரங்களைப் பயன்படுத்தி வழங்குதல் (எ.கா ஆர்.டி.எப் (RDF), எசுபார்க்குவல் (SPARQL))
- பிற வளங்களுக்கு இணைப்புத் தருதல். இதன் ஊடாக மேலதக வளங்களைக் கண்டறிய உதவுதல்.

நாம் கட்டமைக்க முனையும் எந்தவொரு இணைப்புத் தரவு மெய்ப்பொருளியமும் இந்த அடிப்படைக் கொள்கைகளை மதித்து அமைய வேண்டும்.

மெய்பொருளியங்களை வடிவமைக்கும் போது எதிர்நோக்கப்படும் ஒரு பொதுச் சிக்கல் நேர்ப்படுத்தல் (Mapping and Alignment) சிக்கல் ஆகும். அதாவது ஒரே துறையைச் சார்ந்த மெய்ப்பொருளியங்கள் அத் துறையை சிறிய வேறுபாடுகளுடானா வகுப்புக்களாலும் பண்புகளாலும் (language-level mismatches) வரையறை செய்ய முற்படும். அல்லது அத் துறையை விபரிப்பதில் பொருள் சார்ந்த வேறுபாடு (semantics-level mismatches) காணப்படும். இந்தச் சிக்கலைத் தீர்க்க பொது மேநிலை மெய்ப்பொருளியங்கள் (Upper Ontologies) அல்லது குறிப்பு மெய்ப்பொருளியங்கள் (Reference Ontologies) உதவுகின்றன.[6]

இணைப்புத் தரவின் அடிப்படை விழுமியமே ஏற்கனவே உள்ளவற்றை பயன்படுத்தல், உள்ளவற்றுக்கு இணைப்புத் தருதல் ஆகும். அந்த நோக்கில் ஏற்கனவே பரவலான பயன்பாட்டில் உள்ள மெய்ப்பொருளியங்களைப் இயன்றவரை நாம் பயன்படுத்த வேண்டும்.[7] மேலும், மெய்பொருளியம் அடிப்படைப் பண்புகளை வரையறை செய்து, பயனர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு தேர்ந்து பயன்படுத்தவும், நீட்டக் கூடியவாறும் மெய்ப்பொருளியம் அமைய வேண்டும்.

4. மெய்ப்பொருளியத்தை உருவாக்குவதற்கான முறையியல்

மெய்ப்பொருளியங்களை விபரிக்க பல முறையியல்கள் உண்டு. பொதுவாக பின்பற்றப்படும் ஒரு முறையியலை பின்வருமாறு விபரிக்கலாம்:[8]

* செயற்பரப்பை தெளிவாக வரையறை செய்தல் - Define the scope

* கருத்துருக்களை வரையறை செய்தல், எ.கா வகுப்புக்கள் - Define the concepts

* கருத்துருக்களை படிநிலைகள் கொண்ட ஒரு பாகுபாட்டில் ஒழுங்குபடுத்தல் - Organize the concepts/classes into a taxonomy

* வகுப்புக்களுக்கு இடையேயான உறவுகளை வரையறை செய்தல் - Define the relations

* வகுப்புக்களின் பண்புகளையும், அந்தப் பண்புகள் எடுக்கக் கூடிய மதிப்புக்களையும் வரையறை செய்தல் - Define properties, their domains and ranges

* குறிப்பான பொருட்களை வரையறை செய்தல் - Defining the instances

* அடிகோள்களை (axioms), விதிகளை(rules), செயற்கூறுகளை (functions) விபரித்தல்

எமது நோக்கம் ஒரு அடிப்படையான மேநிலை மெய்ப்பொருளியத்தின் மீது, ஏற்கனவே பரந்த பயன்பாட்டில் உள்ள மெய்ப்பொருளியங்களைப் பயன்படுத்தி நீட்டி வடிவமைப்பது ஆகும். அந்த வகையில் இத் துறையில் பயன்படக்கூடிய மேநிலை மெய்ப்பொருளியங்களாக (Upper Ontologies) அடிப்படை முறைசார் மெய்ப்பொருளியம் (Basic Formal Ontology -பி.எப்.ஓ) மற்றும் அனைத்துலக அருங்காட்சியகங்கள் மன்றத்தின் கருத்துரு குறிப்பு மாதிரி (CIDOC Conceptual Reference Model - சி.ஆர்.எம்) அமைகின்றன. துறைசார் மெய்பொருளியங்களாக (Domain Ontologies) பிப்ஃபேரம் (BIBFRAME), போர்ட்லன்ட் பொது தரவு மாதிரி (Portland Common Data Model), திறந்த ஆவணக தரவு மாதிரி (Open Archive Data Model) போன்றவை அமைகின்றன. மேலும், டப்பிளின் கருவகம் (Dublin Core), எசுகீமா (Schema.org), FOAF போன்றவை குறிப்பான கருத்துருக்களை வெளிப்படுத்த பயன்படக் கூடியன.

Berns, A., Gonzalez-Pardo, A., & Camacho, D. (2013). Game-like language learning in 3-D virtual environments. *Computers & Education, 60*(1), 210-220. doi: http://dx.doi.org/10.1016/j.compedu.2012.07.001

Falloon, G. (2015). What's the difference? Learning collaboratively using iPads in conventional classrooms. *Computers & Education, 84*, 62-77. doi: https://doi.org/10.1016/j.compedu.2015.01.010

Foster, R., & Neal, D. R. (2012). 12 - Learning social media: student and instructor perspectives *Social Media for Academics* (pp. 211-226): Chandos Publishing.

Gan, B., Menkhoff, T., & Smith, R. (2015). Enhancing students' learning process through interactive digital media: New opportunities for collaborative learning. *Computers in Human Behavior, 51, Part B*, 652-663. doi: https://doi.org/10.1016/j.chb.2014.12.048

Grosseck, G., & Holotescu, C. (2010). Microblogging multimedia-based teaching methods best practices with Cirip.eu. *Procedia - Social and Behavioral Sciences, 2*(2), 2151-2155. doi: http://dx.doi.org/10.1016/j.sbspro.2010.03.297

Holotescu, C., Grosseck, G., & Danciu, E. (2014). Educational Digital Stories in 140 Characters: Towards a Typology of Micro-blog Storytelling in Academic Courses. *Procedia - Social and Behavioral Sciences, 116*, 4301-4305. doi: http://dx.doi.org/10.1016/j.sbspro.2014.01.936

Ng, W. (2012). Can we teach digital natives digital literacy? *Computers & Education, 59*(3), 1065-1078. doi: http://dx.doi.org/10.1016/j.compedu.2012.04.016

Phungsuk, R., Viriyavejakul, C., & Ratanaolarn, T. Development of a problem-based learning model via a virtual learning environment. *Kasetsart Journal of Social Sciences*. doi: https://doi.org/10.1016/j.kjss.2017.01.001

Seralidou, E., & Douligeris, C. (2015). Identification and Classification of Educational Collaborative Learning Environments. *Procedia Computer Science, 65*, 249-258. doi: http://dx.doi.org/10.1016/j.procs.2015.09.073

Won, S. G. L., Evans, M. A., Carey, C., & Schnittka, C. G. (2015). Youth appropriation of social media for collaborative and facilitated design-based learning. *Computers in Human Behavior, 50*, 385-391. doi: https://doi.org/10.1016/j.chb.2015.04.017

Zhang, M. (2014). Who are interested in online science simulations? Tracking a trend of digital divide in Internet use. *Computers & Education, 76*, 205-214. doi: http://dx.doi.org/10.1016/j.compedu.2014.04.001

Websites

https://www.learning-theories.com/online-collaborative-learning-theory-harasim.html

www. edmodo.com

அட்டவணை 1 : மெய்நிகர் கற்றல் கற்பித்தல் முறைக்கு முன்னர் மாணவர்களின் கட்டுரைகளில் காணப்பட்ட எழுத்துப்பிழைகளின் எண்ணிக்கை

	மெய்நிகர் கற்றல் கற்பித்தலுக்கு முன் மாணவர்களின் கட்டுரைகளில் காணப்படும் எழுத்துப்பிழைகளின் எண்ணிக்கை																			
	தமிழ் மொழியின் சிறப்பு				காடுகளின் பயன்கள்				வாசிப்பின் பயன்				செம்மொழி சான்றோர்கள்				நீர்த் தூய்மைக்கேடு			
மாணவர்கள்	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி
மாணவர் 1	5	15	4	9	4	14	0	5	6	6	2	8	7	9	5	16	8	9	4	14
மாணவர் 2	5	14	5	4	5	15	1	4	9	6	2	5	13	20	4	5	6	14	0	5
மாணவர் 3	7	8	5	15	4	8	4	19	2	7	5	15	7	9	2	18	6	8	1	16
மாணவர் 4	8	9	4	10	8	1	2	14	21	6	2	12	7	15	2	18	19	7	5	17
மாணவர் 5	5	11	4	14	11	16	5	16	15	7	5	8	10	9	4	15	7	10	4	15
மாணவர் 6	9	21	5	11	9	6	4	14	2	8	2	5	8	17	4	9	6	7	1	8
மாணவர் 7	9	6	0	7	7	9	0	8	14	5	0	7	9	12	5	7	14	5	1	15
மாணவர் 8	11	14	5	18	6	9	4	15	12	7	2	14	17	14	4	16	13	12	5	13
மாணவர் 9	15	8	5	9	15	8	4	15	10	2	2	5	8	15	4	15	24	10	2	10
மாணவர் 10	0	5	0	2	6	8	5	7	4	6	0	8	8	6	2	7	6	8	0	8

அட்டவணை 2 : மெய்நிகர்|கற்றல் கற்பித்தல் முறைக்குப் பின்னர் மாணவர்களின் கட்டுரைகளில் காணப்பட்ட எழுத்துப்பிழைகளின் எண்ணிக்கை

	மெய்நிகர் கற்றல் கற்பித்தலுக்குப் பின் மாணவர்களின் கட்டுரைகளில் காணப்படும் எழுத்துப்பிழைகளின் எண்ணிக்கை																			
	தமிழ் மொழியின் சிறப்பு				காடுகளின் பயன்கள்				வாசிப்பின் பயன்				செம்மொழி சான்றோர்கள்				நீர்த் தூய்மைக்கேடு			
மாணவர்கள்	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி	எ.பி	சொ.பி	தி.கு	ஒ.பி
மாணவர் 1	1	0	0	1	1	0	0	3	1	1	0	2	0	2	0	2	2	2	2	1
மாணவர் 2	2	1	0	0	0	1	0	1	1	0	1	0	0	1	0	1	1	1	0	4
மாணவர் 3	1	2	0	3	2	2	0	2	0	2	1	1	0	0	0	1	1	3	0	1
மாணவர் 4	1	1	0	2	1	1	1	4	1	1	1	1	1	1	1	0	0	2	0	2
மாணவர் 5	3	2	0	1	1	3	0	1	0	0	0	3	2	0	0	0	1	1	0	0
மாணவர் 6	1	1	0	1	3	1	0	2	0	1	1	1	1	0	0	3	2	1	0	0
மாணவர் 7	2	0	0	2	1	2	0	1	1	0	1	2	4	0	0	2	1	0	0	1
மாணவர் 8	0	0	0	1	1	1	2	1	0	0	2	0	1	1	0	3	2	1	1	1
மாணவர் 9	1	2	0	0	0	0	0	1	1	1	0	0	2	1	0	3	1	0	0	3
மாணவர் 10	0	1	0	1	1	2	0	2	0	1	2	0	3	2	0	2	1	1	0	1

தமிழ் கற்றல் கற்பித்தலில் 21ஆம்நூற்றாண்டுத் தகவல் தொழில்நுட்ப மதிப்பீடு : *குயிசிஸ்* (Quizizz)

சிவபாலன் திருச்செல்வம்[1] & மோனேஸ்ரூபிணி தியாகராஜன்[2]

[1] தேசியவகைஇந்துவாலிபசங்கத்தமிழ்ப்பள்ளி, பேரா, மலேசியா

[2] சுங்கைபோகாத்தோட்டத்தமிழ்ப்பள்ளி, பேரா, மலேசியா

[1] shivabalanthiruchelvam@gmail.com [2]monesrubini@gmail.com

---

1.0 முன்னுரை

உலக நகர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் ஏற்ப அவ்வப்பொழுது கற்றல் கற்பித்தலில் மாற்றம் ஏற்படுவதும், புத்தம் புதிய சிந்தனைகள் உட்புகுத்தப்படுவதும் அவசியமாகின்றது. உலகோடு ஒட்ட வாழ்தல் மட்டுமன்றி, உலகத் தேவைக்கேற்பவும் வாழச்செய்யும் ஆற்றலைக்கொடுக்கும் கல்வியே வாழும் களத்திற்கும் காலத்திற்கும் ஏற்புடையதாக அமையும் (நாராயணசாமி, 2012). இத்தகைய கல்வியே தனிமனிதனுக்கும், குடும்பத்திற்கும் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன்மிக்க பங்கினை ஆற்றதுணை நிற்கும். இந்தக் கல்வியின் முழுமையான விளைபயனை அறிய அதற்கான மதிப்பீடு மிக முக்கியஇடத்தினை வகிக்கின்றது. இந்த மதிப்பீடானது மிகத்துள்ளியமாகவும் உடனுக்குடனும் நடத்தப்படுவது அவசியமாகின்றது. அதனை அவ்வாறு செய்ய இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, 21ஆம் நூற்றாண்டுத் திறன்களில் ஒன்றான தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கொண்டு எவ்வாறு அதனைச் சாத்தியப்படச் செய்வது என்பதனை விளக்கவல்லதே இவ்வாய்வு.

2.0 ‘குயிசிஸ்’ (Quizizz)

ஒரு பாடத்தின் இறுதியில் அதன் விளைபயனை அறிவதற்காக மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டை மாணவர்களுக்கு மனமகிழ்வாகவும் ஆசிரியர்களுக்கு எளிமையாகவும், துள்ளியமாகவும் தொழில்நுட்பஉதவியுடன் மேற்கொள்ள வழிவகுப்பதுதான் இந்த ‘குயிசிஸ்’ புதிர்வகை மதிப்பீடு. முற்றிலும் இலவயமாகப் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மென்பொருள், திறன்பேசிகளில் பயன்படுத்தும் வண்ணம் ஆன்டிராய்டு, ஆப்பிள் அங்காடிகளிலும் செயலியாக இருக்கின்றது. இந்த மென்பொருளில் பயனராக மட்டும் செயல்படாது, நமது தேவைக்கேற்ப உள்ளீடு செய்பவராகவும் பங்காற்றலாம். இது ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்ட மென்பொருள் என்றாலும், தமிழ்க் கல்வி மதிப்பீட்டிற்கு இது முழுமையான பங்கினை ஆற்றவல்லது.

3.0 ஆய்வுக்குரியசிக்கல் :

3.1 மாணவர்களின் தனியாள் அடைவு நிலையைத் துள்ளியமாக அறிவதில் ஆசிரியர்களுக்குச் சிக்கல் ஏற்படுகின்றது.

3.2 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையை உடனுக்குடன் அறிவதில் ஆசிரியர்களுக்குச் சிக்கல் ஏற்படுகின்றது.

4.0 ஆய்வின்நோக்கம் :

4.1 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் 'குயிசிஸ்' வழி துள்ளியமாகக் கண்டறிதல்.

4.2 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் 'குயிசிஸ்' வழி உடனுக்குடன் கண்டறிதல்.

5.0 ஆய்வின்வினா :

5.1 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் 'குயிசிஸ்' வழி துள்ளியமாகக் கண்டறிய இயலுமா?

5.2 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் 'குயிசிஸ்' வழி உடனுக்குடன் கண்டறிய இயலுமா?

6.0 ஆய்வுக்குட்பட்டோர்

மலேசியாவின் பேரா மாநிலத்தின் லாருட்மாத்தாங் செலாமா, கிரியான் ஆகிய இரு மாவட்டங்களைச் சார்ந்த 34 தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள்.

7.0 ஆய்வின்முறைமை :

இந்த ஆய்வுபண்புசார், அளவுசார் ஆகிய இரு முறைமைகளையும் உள்ளடக்கி நடத்தப்பட்டது. 'குயிசிஸ்' பயன்பாட்டிற்கு முன்பும் 'குயிசிஸ்' பயன்பாட்டிற்குப் பின்பும் தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் மதிப்பீடு மீது ஆசிரியர்களின் பார்வையையும் பயன்பாட்டையும் இந்த இரு முறைமைகளும் கூறி நிற்கின்றன.

8.0 ஆய்வின்அமலாக்கம் (திட்டப்பணி) :

இந்தப் புதிர்வகை மதிப்பீடான 'குயிசிஸ்'ல் இணைய https://quizizz.com/admin என்ற இணையமுகவரியைப் பயன்படுத்துதல் வேண்டும். பின் இதன் முழுமையான பயனைப்

பெற சரியான செயல்முறைகளைக் கையாள்வது அவசியமாகின்றது. தொடர்ந்து அதன் செயல்முறை விளக்கத்தினைக் காண்போம்.

8.1 சுயக்கணக்கைஉருவாக்குதல்

இந்த மென்பொருளைப் பயன்படுத்த முதலில் அதன் பக்கத்தில் நமது சுயக்கணக்கை உருவாக்குதல் வேண்டும்.



படி1 :தங்கள்சுயவிவரங்களைக்கொண்டகணக்கைஉருவாக்குதல்.

கூகுள் கணக்கு வைத்திருப்பவர்கள் தனியாக ஒரு கணக்கை உருவாக்க வேண்டிய அவசியமன்று. நமது கூகுள் கணக்கை இந்த மென்பொருளுடன் ஒருங்கிணைத்தால் போதுமானது.

8.2 வினாக்களைஉருவாக்குதல் / தேர்ந்தெடுத்தல்

இந்த மென்பொருளை ஏற்கனவே பயன்படுத்திய பயனர்கள்தங்களுக்குத் தேவையான வினாக்களைத் தயார்செய்து இங்கு உள்ளீடு செய்திருப்பார்கள். நமது கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வினாக்களாக அது இருக்கும் பட்சத்தில் நாம் அதையே நமது மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தலாம். இல்லையேல், நமது தலைப்பிற்கு ஏற்பவும், மாணவர்களின் நிலைக்கு ஏற்பவும் நமக்கான வினாக்களை நாமே மிக எளிமையாக உருவாக்கலாம்.முன்பே கூறியது போன்று, இந்த மென்பொருளில் பயனராக மட்டும் அல்லாது நாம் உள்ளீடு செய்பவராகவும் பங்காற்றலாம். எனவே, நாம் உருவாக்கிய இந்த வினாக்கள் பின்னாளில் மற்ற பயனர்களால் பயன்படுத்தப்படும்.



படி2 :

உங்களுக்கான வினாக்களை உருவாக்குதல் அல்லது தேர்ந்தெடுத்தல். தேர்ந்தெடுக்க :*search my quizziz* உருவாக்க :*create own*

படி3 :

வினா உருவாக்க முதலில் வினா தலைப்பு, வினா முகப்புப்படம், மொழி ஆகியவற்றை உள்ளிடுதல்



படி4 :

உங்கள் வினாக்களை எண்களுக்கேற்ப உருவாக்குதல். அதற்கான விடைகளை உள்ளிடுதல் (ஒரு சரியான, மூன்று பிழையான விடைகள்).

8.2 மாணவர்களை இணைத்தல்

வினாக்களை உருவாக்கியப்பின் மாணவர்களை ஒரே நேரத்தில் தனியாள் முறையில் இந்தப் பக்கத்திற்குள் நுழையச் செய்தல் வேண்டும். நாம் உருவாக்கிய வினாப் புதிருக்கு ஒரு கடவுஎண் வழங்கப்படும். அதைக்கொண்டு மாணவர்கள் இந்தத் தளத்தில் நமது கணக்கோடு இணையலாம்.



படி5 :

வினாப்புதிர் தயார் ஆனதும் கடவுஎண்பெற *play live* குறியைச் சொடுக்குதல்.



படி6 :

கடவுஎண் ஆசிரியரின் முகப்பில் தோன்றியதும் மாணவர்கள் *join game* வழிபுதிரில் இணைதல். அனைத்து மாணவர்களும் இணைந்தப்பின் புதிரைத் தொடங்க *Start Game* சொடுக்குதல்.

அனைத்து மாணவர்களும் இணைந்தபின், ஆசிரியர் புதிரைத் தொடங்கலாம். மாணவர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் பதிலளிக்கும் நேரத்தையும் ஆசிரியர் கட்டுப்படுத்தலாம். மாணவர்கள் வினாக்களுக்கு விடையளித்து முடித்த உடனேயே மாணவர்களின் புள்ளிகள் ஆசிரியரின் முகப்பில் தெரியவரும். இதைக்கொண்டு அன்றையக் கற்றல் கற்பித்தலின் நோக்கத்தை அடைந்த / அடையா மாணவர்களை ஆசிரியர் மிகவிரைவாகவும் துள்ளியமாகவும் கண்டறிய இயலும்.

9.0 ஆய்வின்பகுப்பாய்வு :

ஆய்வின் பகுப்பாய்வு ஆசிரியர்களிடம் மேற்கொண்ட நேர்காணல் மூலம் பண்புசார் அளவிலும், வினாநிரல் மூலம் அளவுசார் அளவிலும் மேற்கொள்ளப்பட்டது.

	நோக்கங்கள்	முன்		பின்	
		ஆம்	இல்லை	ஆம்	இல்லை
1	குயிசிஸ்வழி துள்ளியமாகக் கண்டறிய இயல்கிறது	3	31	34	0
2	குயிசிஸ்வழி உடனுக்குடன் கண்டறிய இயல்கிறது	5	29	34	0

10.0 ஆய்வின்முடிவு :

10.1 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் ‘குயிசிஸ்’ வழி துள்ளியமாகக் கண்டறிய இயலும்.

10.2 மாணவர்களின் தனியாள் அடைவுநிலையைக் ‘குயிசிஸ்’ வழி உடனுக்குடன் கண்டறிய இயலும்.

11.0 முடிவுரை

இந்த 'குயிசிஸ்' புதிர்வகை மென்பொருள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்தக் கருவியைக் கொண்டும் பயன்படுத்தும் வகையிலும் பயனடையும் வகையும் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த 'குயிசிஸ்' போன்றே இன்னும் பல அரிய மென்பொருள்கள், குறிப்பாகத் தமிழ்க் கல்விக்கு ஏதுவான மென்பொருள்கள் இன்று அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த மென்பொருள்களை ஆசிரியப் பெருமக்கள் சரியாகப் பயன்படுத்தி நிறைவான பயனை அடைதல் வேண்டும். இந்த வகை 21ஆம் நூற்றாண்டுத் தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றல் கற்பித்தலில் ஒருங்கிணைப்பதானது ஆசிரியர்கள், மாணவர்களைத் தாண்டி தமிழுக்கும் தமிழ்க் கல்விக்கும் மிகப்பெரிய நன்மையைப் பயப்பதாய் அமைகின்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

12.0 மேற்கோள்பட்டியல்

1. சிவபாலன், தி.(2016, அக்டோபர் 18). *தமிழ்க் கல்வியும் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களும்*: ஒருபார்வை. எடுத்தாளப்பட்டது மார்ச் 5 2017, மூலம்
2. சுப்புரெட்டியார், ந) .2002). *தமிழ் பயிற்றும் முறைகள்*. சிதம்பரம் மெய்யப்பன் : தமிழாய்வகம்.
3. மலேசியக்கல்வி அமைச்சு. (2016). *தமிழ்ப் பள்ளிக்கான சீரமைக்கப்பட்ட தமிழ் மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதீப்பீட்டு ஆவணம் :ஆண்டு 1*. மலேசியக் கல்வி அமைச்சு.
4. Jamalludin Harun. (2003). *Multimedia dalam Pendidikan.* Kuala Lumpur: PTS Publications.
5. https://quizizz.com

ஊடாடல், நகர்ப்படங்கள் கலந்த மின்னூல்கள்வழிக் குழந்தைகளுக்கானத் தமிழ்க்கல்வி

கஸ்தூரி இராமலிங்கம்
khasturiam@gmail.com

முன்னுரை

மழலையர்களும் தொடக்கப் பள்ளி மாணவர்களும், தமிழ்க்கதைகளை எளிதாகவாசிப்பதற்கும் அவற்றோடு ஒன்றுவதற்கும், மின்னூல்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். வாசிப்பதோடு நின்று விடாமல், கதைகளில் வரும் பெயர்களையும் சொற்களையும் நினைவில் வைத்துக்கொள்ளும் வகையில், நூலிலேயே துணை நடவடிக்கைகளைச் சேர்ப்பது பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

2011-ஆம் ஆண்டு மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடந்த"கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள்" பன்னாட்டு மாநாட்டில் கணிஞர் முத்து நெடுமாறன் படைத்த"கையடக்கக் கருவிகளில் தமிழ் மின்னூல் உருவாக்கம்'என்ற தலைப்பிலான கட்டுரை, இந்த ஆய்வினை மேற்கொள்ள வித்தாக அமைந்தது. இக்கட்டுரையில்,ஐ-பேட்-இல் இ-பப் வடிவிலான மின்னூல்களை வாசிப்பதற்கு ஐ-புக் (iBook) எனும் செயலி உள்ளதைச் சுட்டிக்காட்டினார். இந்தச் செயலியின் வழி வாசிக்கப்படும் நூல்களில்,'உரக்க வாசிக்கும்' (read aloud) ஏந்து (வசதி) உள்ளது. மின்னூலில் உள்ள வரிகளை ஒலிப்பதிவு செய்து நூலோடு சேர்க்கலாம். நூலைத் திறந்து ஐ-புக் செயலியை அதில் உள்ள வரிகளை வாசிக்கச் சொல்லலாம். தமிழ் உச்சரிப்பைச் சரிவரக் கற்பிப்பதற்கு இந்த ஏந்து பேருதவியாக இருக்கும் என்று கூறிய அவர், மின்னூலின் ஈர்ப்புத் தன்மையைக் கூட்டுவதன் வழி, மாணவர்கள் நூலின் மேல் வைத்துள்ள ஈடுபாட்டையும் கூட்டுகிறது என்றும் கூறுகிறார்.

இதனைத் தொடர்ந்து, சிங்கப்பூரில் உள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு, அவர்களின் குரலிலேயே 'வாசிக்க வைக்கும்' மின்னூல்களை உருவாக்குவதற்கான செயலியையும் உருவாக்கினார்.

இந்த மேம்பாட்டின் தொடர்ச்சியாக, வாசிக்கும் தன்மையோடு,நகர்ப்படங்களும் அவற்றோடு ஊடாடும் வசதியும், கதைகளுக்கேற்றத் துணை நடவடிக்கைகளும் ஐ-புக் செயலியின் உதவி இல்லாமலேயே தமிழ் மின்னூல்களுக்கான சிறப்புச் செயலி ஒன்றனில் சேர்க்கப்படவுள்ளது. இந்த மின்னூல்கள், எளிய சொற்களை அறிமுகப்படுத்துவதோடு, அவற்றைக் கேட்டல் முறையில் முறையாக உச்சரிக்கும் வழிமுறைகளையும் பயிற்றுவிக்கவுள்ளது.

இவை யாவும் மாணவர்களுக்கு வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதுமட்டுமல்லாமல் சொற்களை, முறையாக உச்சரிக்கும் வழிமுறைகளையும் உடன் கற்கச் செய்கின்றது. மாணவர்கள் கதைகளை வாசிக்கும் போது சரியான ஏற்றம், தொனி உச்சரிப்பு, நயம், ஆகியவற்றுடன் வாசிக்க உதவுகிறது.

இம்முயற்சி மழலையர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறு வயது முதலே தமிழ் மொழியின் மீது ஆர்வத்தினையும் ஆற்றலையும் வளர்க்கும் கருவியாக அமையும் என்பதே எங்கள் நம்பிக்கை.

இன்றைய சூழல்

தமிழ் மொழிப் புலமையோடு குழந்தை இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டவர்களால் குழந்தைகளுக்கு ஏற்பச்சிறந்தப் படைப்புகளை உருவாக்க இயலும். இந்த உருவாக்கங்களை, நோக்கம் குலையாமல், மின்னுட்பக் கருவிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதனைச் செய்யும் நுட்பவல்லுனர்கள், குழந்தைகள் உலகை நன்கு புரிந்துகொண்டுள்ளவர்களாகவும், தமிழின் அழகையும் சுவையையும் உணர்ந்தவர்களாகவும் இருந்தால்,உருவாக்கங்கள் மேலும் சிறப்படையும். இந்த இரண்டு துறையும் இணைந்து உருவாக்கப் படும் மின்னூல்களே சிறந்த முறையில் பயனர்களைச் சென்றடைகின்றன.

குழந்தைகளுக்காக உருவாக்கப் பெற்ற தமிழ் மின்னூல்களை ஒரு பார்வையிட்டோம். அவை ஏற்ற அமைப்பில் உள்ளனவா என ஆராய்ந்தோம். கட்டுரையின் முன்னுரையில் கூறப்பட்ட நோங்கங்களை இலக்காகக் கொண்ட மின்னூல்கள்,எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தன. கூகுள், ஆப்பிள் ஆகிய செயலிக் கூடங்களில் மின்னூல்கள் பல உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்-துள்ளோம். குறிப்பாகக் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட மின்னூல்களின் பயன்பாட்டினை ஒப்பாய்வு செய்ததில்,கீழ்க்காண்பவை தெளிவாகத் தென்பட்டன:

பெரும்பாலான மின்னூல்களின் உள்ளடக்கங்களை அச்சில் வழங்குவது போலவே மின்வடிவிலும் வழங்குகின்றன. இவற்றில் பல இலவசமாகவே பதிப்பிக்கப் படுகின்றன. நூல்களைப் பெறுவதற்கு இந்த முயற்சிகள் உதவினாலும், ஒலி, நுகர்நுட்பம், ஊடாடல் போன்ற தன்மைகளுக்கு இவை முதன்மையான இடத்தைத் தரவில்லை.

சற்று அதிக நுட்பங்களைச் சேர்க்கும் மின்னூல்கள் காணொளிகளைச் சேர்க்கின்றன. காணொளிகள் ஒரு நூலோடு குழந்தைகள் ஈடுபடும் பட்டறிவைச்சற்றுக் குலைக்கின்றன என்பது எங்கள் கருத்து. எனவே, கதைகளுக்கு ஏற்ற பின்னணி ஒலி, நகர்படங்கள், கதைகளில் வரும் பாத்திரங்களோடும், பக்கங்களில் தோன்றும்

பொருள்களோடும் குழந்தைகள் ஊடாடுவதற்கான வாய்ப்பு, படித்தக் கதைகளை ஒட்டிய விளையாட்டு நடவடிக்கைகள் முதலியக் கூறுகளைக் கொண்ட மின்னூல்களோ செயலிகளோ தமிழில் இல்லை என்பதே எங்களின் தேடலின் இறுதியில் நாங்கள் கண்ட முடிவாகும்.

பல மின்னூல்கள் வெற்றிகரமாக உருவாக்கம் கண்டிருந்தாலும் அவற்றின் பயன்பாடுகுறைவாகவே உள்ளது. சிங்கப்பூரில்2015-ஆம் ஆண்டு நடைபெற்ற 14-வது தமிழ் இணைய மாநாட்டில், ஆய்வுக் கட்டுரையாளர் திரு வாசுதேவன் இலச்சுமணன்மேற்கொண்ட ஆய்வில், 137 தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுள் 18.9 விழுக்காட்டினர் மட்டுமே தமிழில் மின்னூல் வாசிப்போராக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும்; தமிழ் மின்னூல் வாசிக்காதோர் 63.5 விழுக்காட்டினர், என்றும் கூறினார்.

இச்சூழலின் விழைவாக,மின்னூல்களை உருவாக்கும் ஆர்வலர்கள், ஊக்கமும்,உற்ற அங்கீகாரமும் இன்றி அவரவர் முயற்சிகளில் இருந்து பின் வாங்கும் நிலையே ஏற்படுகின்றது. தமிழ் மின்னூல்களின் எண்ணிக்கையோடு ஆங்கில மின்னூல்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால், தமிழ் மின்னூல்களின் எண்ணிக்கை விழுக்காட்டளவிலும் மிகப்பெரிய வேறுபாட்டைக் காட்டுகின்றது.

ஆங்கில மின்னூல்களைப் பயன்படுத்தும் முனைப்பு, குழந்தைகளிடையே பெரிய அளவில் காணப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. பல்வகை துறை சார்ந்த மின்னூல்கள் ஆங்கில மொழியில் பெருமளவில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இம்மின்னூல்கள் நிறங்கள் நிறைந்த காட்சிகளோடும், நகர்ப்படங்களோடும் மழலையர்களுக்காகவே சிறப்பாக உருவாக்கப்படுவதை நம்மால் காண முடிகிறது. குழந்தைகள் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மின்னூல்களைத் தான் தொடர்ந்து மகிழ்வுடன் பயன்படுத்தி மேலும் படிக்க முனைப்பு காட்டுகின்றனர். அதுமட்டுமல்லாமல், இம்மின்னூல்களில் பலவகையான பயிற்சிகளும் ஈர்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட மின்னூல்கள் தமிழில் காணப்படுவது அறிதாக உள்ளது. இச்சூழல் பெற்றோர்களுக்கு மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும் ஏமாற்றத்தையே தருகின்றது.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் தமிழ் மின்னூல்கள் ஆங்கில மின்னூல்களின் தன்மைகளைக் காட்டிலும், ஈர்ப்புத்தன்மை, ஊடாடல் ஆகிய அடிப்படையில் வளர்ச்சி காணாவிடில் தமிழ்க் குழந்தைகள் தமிழ் மொழிக்காக தொடர்ச்சியான நேரம் ஒதுக்க முனைப்பு காட்ட மாட்டார்கள் என்பது வெள்ளிடை மலை.

அணுகுமுறை

இந்த ஆய்வுக்காக பலவகை வடிவத்திலான ஊடாடல் வசதிகொண்டதமிழ் மின்னூல்களை ஒப்பீடு செய்து, அவற்றில் இடம் பெற்றுள்ள நகர்படங்களையும் தொடர்ப்படங்களையும் அடையாளம் கண்டோம். வெவ்வேறு அணுகுமுறைகள் இருப்பினும் அவை அனைத்தையும் குழந்தைகளுக்குப் பொருந்தும் வகையில் அமையாததையும் கண்டறிந்தோம். கீழ்க்காணும் சில தன்மைகள் தெளிவாகத் தென்பட்டன:

அ. காணொளி சேர்க்கை

பல்லூடக இணைப்புகளைச் சேர்ப்பது, மின்னூல்களில் உள்ள பல வசதிகளில் ஒன்று. படங்கள், ஒலிப் பதிவுகள், நகர்படங்கள், காணொளிகள் போன்றவற்றை விரும்பும் பக்கங்களில் சேர்க்கலாம். இருப்பினும், மற்ற ஊடகப் பதிவுகளைவிட, காணொளிப் பதிவுகள் ஒரு நூலை வாசிக்கும்போது கிடைக்கும் அனுபவத்துக்கு மாறுபட்ட ஓர் அனுபவத்தைத் தருகின்றன.

நூல்களை வாசித்தலும், காணொலிகளைக் காண்பதும், வெவ்வேறு பயனர் அனுபவங்களாகும். நூல்களில், அடுத்தடுத்தக் கட்டங்களுக்குச் செல்லும் கட்டுப்பாடு, வாசகரின் கையிலேயே உண்டு. வாசிப்பினை மேற்கொள்ளும்போது வாசிப்பவர்களால் புத்தகத்தில் உள்ள தகவல்களையும் உள்ளடக்கத்தையும் அவரவர் விரும்பும் வேகத்திற்கேற்ப உள்வாங்க முடிகின்றது. எதிர்மாறாக, ஒரு காணொலியில் உள்ள செய்திகளும் உள்ளடக்கமும் வாசகர்களுக்குத் 'தள்ளப்படுகின்றன'. ஏனெனில், காணொளிகள் அமைக்கப்பட்ட வேகத்தோடு, அக்காணொளியின் செய்தியையும் உள்ளடக்கத்தையும் வாசகர்கள் பின்பற்ற வேண்டும். எனவே, மின்னூல்களில் காணொளிகளைச் சேர்ப்பது வாசகர்களுக்குஒருதொடர்ச்சியான அனுபவத்தை வழங்க உதவவில்லைஎன்னும் கருத்தை இங்கே முன்வைக்கிறோம்.

ஆ. கதைகளின் பின்னனி

தமிழ் மொழியைக் கற்பிக்கும் நோக்கில் மின்னூல்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், கதைகளின் அமைப்பு, ஓர் அனைத்துலகத் தன்மையைக் கொண்டுள்ளனவாகத் தென்படவில்லை. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் குழந்தைகள் பல்லின மக்கள் வாழும் சூழலில் வளர்கின்றனர். பல்வேறு பண்பாட்டு விழாக்களையும் கொண்டாடுகின்றனர். இவற்றோடு ஒட்டி இருக்கும் கதைகளைக் குழந்தைகள் ஈடுபாட்டோடு படிக்கவும், அவர்கள் வாழும் சூழலோடு தங்கள் தாய்மொழியை இணைக்கவும் வாய்ப்பளிக்கும்.

இந்தத் திட்டத்தின் வழி உருவாக்கப்படும் நூள்களில், தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளில் உள்ள கல்விக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டுக் கதைகள் எழுதப்படும். வாசிக்கும் இடங்களுக்கேற்ப படங்களையும் சூழல்களையும்

மாற்றியமைக்கும் நுட்பம், நூல்களை வாசிக்கப் பயன்படும் செயலிகளிலேயே சேர்க்கப்படும்.

இ. விளையாட்டு நடவடிக்கைகள்

பெரும்பாலானத் தமிழ் மின்னூல்கள் வாசிப்போடு நின்று விடுகின்றன. வாசிக்கப்பட்ட கதைகளை ஒட்டியத் தொடர் நடவடிக்கைகள் சேர்க்கப்படவில்லை.
இந்தத் திட்டத்தின் கீழ் வரும் நூல்களில், வாசிப்பின் ஈடுபாட்டை அதிகரிக்க மொழி விளையாட்டுகள் இணைக்கப்படும். விளையாடும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப்பரிசுகளும்நூலிலேயே வழங்கப்படும். இப்படிச் செய்வதன் வழி மாணவர்களிடையே மேலும் வாசிக்க வேண்டும் என்னும் ஆர்வம் கூடுகின்றது. அதுமட்டுமின்றி இம்மின்னூலில் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் கதையின் உள்ளடக்கம், கதைமாந்தர்கள், சொற்கள் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்-பட்டவை. மாணவர்களிடையே தொடர்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தி அக்கதைகளை மீட்டுணர்ந்து உள்வாங்கச் செய்யும் ஆற்றலை ஏற்படுத்துவதற்காகவும் இந்த மின்னூல்கள்உருவாக்கப்படுகின்றன.

ஈ. மின்னுட்பப் பயன்பாடு

மின்னுட்பத்தைப் பயன்படுத்திப் பற்பல செயல்களை மேற்கொள்ள முடியும். ஆய்வு செய்யப்பட்டமின்னூல்கள் சிலவற்றில், தொழில்நுட்பம் இருக்கும் காரணத்தால் மட்டுமே சில கூறுகள் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இது மிகச் சிறந்த அணுகுமுறை என்று கூறுவதற்கு அல்ல.

தொழில்நுட்பத்தால் இந்தப் பயன்பாட்டை வழங்க இயலும் என்பதை விட, இந்தப் பயன்பாடு குழந்தைகளுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே முதன்மையானது.

ஆகவே, நாங்கள் குழந்தைகளுக்காகவே சிறப்பான உள்ளடக்கத்தைத் திட்டமிட உறுதி செய்தோம். அதன்பிறகே, இவ்வுள்ளடக்கங்களை மிகத் துல்லியமான வழியில் குழந்தைகளுக்குச் சென்றடைய தகுந்த தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்தோம். தற்போதைய நிலையில், ஊடாடல், நகர்ப்படங்களை உட்புகுத்தி மின்னூல்களை உருவாக்க பள்ளிகளிலும் வீட்டிலும் பயன்பாட்டில் உள்ள மின்னுட்பக் கருவிகளை, குறிப்பாகக் கையடக்கக் கருவிகளைக் கண்ணோட்டமிட்டோம். பொதுவாக, மூன்று வகையான கருவிகளே உள்ளன. பள்ளிகளில் ஐ-பேட் கருவிகள் பரவலான பயன்பாட்டில் உள்ளன. வீட்டில் ஆண்டிராய்டுகருவிகளை அதிகப் பயன்பாட்டில் உள்ளன. இருப்பினும் இச்சூழல் நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருப்பதையும்கண்டோம். எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாடுகளில் ஐ-பேட்டுகள்வீடுகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

முழுமைபெற்ற எங்கள் மின்னூல்கள் அதிகப் பயன்பாட்டிலுள்ள ஐ-பேட், ஆண்டிராய்டு, விண்டோசு ஆகிய மின்னுட்பக் கருவிகளில் ஒரே தரத்தில் செயல்படுவதை உறுதி செய்துள்ளோம்.

முதன்மைக் கூறுகளில் ஒன்றான ஊடாடும் வசதி, நகர்ப்படம், அசைவூட்டம், குரல் பதிவு இம்மின்னூலுக்குத் தேவைப்பட்டன. பின்னனிக் குரல் பதிவைச் சேர்ப்பது, குழந்தைகளுக்குச் சொற்களை முறையாக உச்சரிக்கும் வழிமுறைகளையும் உடன் கற்கச் செய்கின்றது. மாணவர்கள் கதைகளை வாசிக்கும் போது சரியான உச்சரிப்பு, நிறுத்தம், நயம், தொனி ஆகியவற்றுடன் வாசிக்கும் வழிமுறைகளையும் கற்பிக்கின்றது. இப்படிச் செய்வது, குழந்தைகளுக்குக் கதைகளையும் சொற்களையும் விரைவாக நினைவில் கொள்ளும் ஆற்றலையும் வளர்க்கின்றது. மின்னூல், தானாகவே வாசித்துக் காட்டும் சூழல், பின்னனிக் குரல் இல்லாமல் குழந்தைகளே வாசிக்கும் சூழல் என இரு சூழல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

நடவடிக்கை வகைகள்

நூல்களோடு மாணவர்களின் ஈடுபாட்டைக் கூட்ட, மொழி விளையாட்டுகள் இணைக்கப்பெற்றுள்ளன. “வாசித்துக் காட்டு”, “நானே வாசிக்கிறேன்” எனும் வாசிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரே மாணவர்கள் இந்த விளையாட்டுகளை விளையாடுவர். முதல் கட்டத்தில் 4 வகையான விளையாட்டுகள் இணைக்கப் பட்டுள்ளன:

1. படக்குவியல்

படக்குவியலில் மாணவர்கள் வெட்டப்பட்ட படங்களை முறையாக அடுக்குவர். ஒவ்வொரு முறை விளையாட்டை மேற்கொள்ளும் போதும் மாணவர்களுக்கு வெவ்வேறு படங்கள் வழங்கப்படும். காண்பவர் கண்களைக் கவர்ந்திழுத்து மேலும் மேலும் பயிற்சியைச் செய்யத் தூண்டும் இப்பயிற்சிகள், மாணவர்களுக்கு சலிப்பினைத் தராது.

2. படத்தோடு சொல்லை இணைக்கும் விளையாட்டு

கதையை வாசித்த பின்னர், கதையில் இடம்பெற்ற படங்களும் சொற்களும் இவ்விளையாட்டில் புகுத்தப்படும். மாணவர்கள் படங்களைத் தகுந்த சொல்லுடன் இணைப்பர். மிகவும் எளிமையான இந்த விளையாட்டு மாணர்களுக்கு மகிழ்ச்சியையே தரும்.

3. நிறம் தீட்டுதல்

கதையில் கண்ட காட்சிகள் இந்தப் பயிற்சியில் இணைக்கப்படும். மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த வகையில் ஏற்ற நிறங்களைப் பயன்படுத்தி நிறமற்றப் படங்களுக்கு நிறமூட்டுவர். மாணவர்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்டுவதற்கு நிறங்களும் துணைப்பொருள்களும் படங்களைச் சுற்றி வைக்கப்படும்.

4. விடுபட்ட எழுத்து விளையாட்டு

இந்தப் பயிற்சியில் மாணவர்களுக்குப் படமும் விடுபட்ட எழுத்து கட்டங்களும் வழங்கப்படும். மாணவர்கள் படங்களுக்கேற்ப எழுத்து கட்டங்களில் விடுபட்ட எழுத்தினை நிரப்புவர்.

இவ்வகையான மொழி விளையாட்டுகளை மேற்கொள்வதனால், குழந்தைகளுக்கு நினைவு கொள்ளும் ஆற்றலும் சொற்களஞ்சியமும் வளர்க்கின்றன. மேலும் ஒவ்வொரு விளையாட்டிலும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப்பரிசு வழங்கப்படுகின்றது. இவ்வகையான நடவடிக்கைகள் மாணவர்களை மேன்மேலும் மின்னூல்களைப் பயன்படுத்த ஆர்வமூட்டி, மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்க மிகவும் துணைபுரிகின்றன.

முடிவுரை

தமிழில் இன்னும் வளர்ச்சிப்பெறாத துறை இது. இம் முதல் முயற்சி பல்லாற்றானும் சிறப்பாய் அமையப் பல்வேறு கூறுகள் ஆராயப்பெற்றன. கதைவடிவமும் பயிற்சி முறைகளும் ஆய்ந்து தேர்ந்து இணைக்கப் பெற்றன. தகுந்த இடத்தில் தக்க அளவில் தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டது. இம் முயற்சி முத்தாய்ப்பாய் அமையப் பட்டறிவுமிக்க கல்வியாளர் பெருமக்கள்தம் கருத்துகளும் பெறப்பட்டன. இப்பெருந்திட்டத்தின் வெற்றி இது போன்ற நுட்பங்கள் அடங்கிய நூட்களை வெளியிட பலருக்கும் உந்துதல் அளிக்கும் என நம்புகிறோம்!

கட்டுரை எழுதத் தகவுரை கூறி ஆற்றுப்படுத்திய,முனைவர் முரசு நெடுமாறன், கணிஞர் முத்து நெடுமாறன், ஆகியோருக்கு என் நன்றியதலைப் புலப்படுத்தி அமைகிறேன்.

கலைச்சொற்கள்:

பல்லூடகம் - multimedia; ஊடாடல் - interactive; பயனர்பட்டறிவு - user experience

குறிப்புகள்:

1. http://ta.wikipedia.org/wiki/மின்னூல்
2. முத்து நெடுமாறன் (2011) கையடக்கக் கருவிகளில் தமிழ் மின்னூல் உருவாக்கம்', 12.8.2011 முதல் 14.8.2017, மலாயாப் பல்கலைக்கழகம், மலேசியா.http://anjal.net/ebooks/eBooks-in-Tamil.epub
3. வாசுதேவன் இலட்சுமணன் (2015) 21ஆம் நூற்றாண்டு கற்றல் திறன்களில் அட்டைக் கணினி வழித் தமிழ் மின்னூல் உருவாக்கம்: ஓர் ஆய்வு, 14வது தமிழ் இணைய மாநாடு, சிங்கை.

PADAM INAITHAL-WORDS MATCHING WITH IMAGES GAME

Gokul Kumar, M [1] Keerthana, V[2] Hemanandhini, S[3] Dr. Mala, T[4] Yesodha, K[5]

[1 2 3] UG Scholars, [4] Associate Professor, [5] Research Scholar,

Department of Information Science and Technology,

Anna University, Chennai, Tamil Nadu

[4] malanehru@annauniv.edu [5]yeshoda.ammu@gmail.com

ABSTRACT:

Recent digital games have been developed not only for entertainment purposes, but also to promote learning. In this research work, Kids AR Memory Matching game in Tamil has been proposed which is an Augmented Reality (AR) game for learning words in English and Tamil language. First person game controllers have been used as user interfaces to increase immersion in playing games. Game controllers allow a player to explore and move, reload and destroy then activate secondary functions such as zooming within a forest environment. The goodness of the features extracted from the instances and the number of training instances are key components for building an effective model. This work is completely implemented in Unity 3D and has been compared with ABC3D Augmented Reality game. This work consists of three components – i. Matching Images with Word, ii. First Person Controller and iii. Third Person Controller.

1. INTRODUCTION

The objective of the research work is to develop an Augmented Reality based game which can help children to learn words and their usages. The outcome of the research work is the Words matching with images game (Padam Inaithal) which is a specially designed game. The implementation of Padam Inaithal is divided into three main components. The first part includes matching the images with words. This is achieved using the vuforia packages from vuforia developer portal which is a database for right and wrong answer. The second part is the first person controller which is present in the forest environment. The traditional Doom-style first person controls are not physically realistic. The solution is the specialized Character Controller. It is simply a capsule shaped Collider which can be told to move in some direction from a script. The third part is basically interfacing the third person controller in the forest environment. Third-person controller games almost always incorporate an aim-assist feature, since aiming from a third-person camera is difficult.

2. RELATED WORK :

R.Ballagas et al. [1] have proposed the world of mobile technologies is in a constant and growing popularity, becoming more ubiquitous every day. Mobile devices have increasingly

demonstrated their usefulness and applicability in a daily basis, to assist users in their work, to be used in a familiar environment or to support forms of entertainment. These devices are equipped with high resolution cameras and other resources such as GPS and accelerometer. A. Mulloni et al. [2] have proposed the interest in implementing augmented reality applications on mobile systems has increased significantly. These systems, which integrate reality with virtual elements, provide the user with an easy and safe interaction, without prior knowledge of this technology. Augmented reality can be useful in any application that needs to display information not available. P. Skalski et al. [4] proposed game controllers that are used as user interfaces to increase immersion in video games. Research on the subject has focused on studies of how interactivity can affect enjoyment leading to find positive relation between the two.

3. SYSTEM ARCHITECTURE

The following **figure 1** depicts the System Architecture Diagram for Kids AR Memory Matching game in Tamil namely the Padam Inaithal. It shows the overall schematic view of the process involved in gaming. The user interface module provides bilingual languages (both Tamil and English). The image part contains the image target and corresponding meta-data which is stored in the cloud database. The user places the marker on the webcam and using vuforia SDK, image detection and tracking is done for correctness of matching.



Figure. 1. System Architecture Diagram for Kids AR Memory Matching game in Tamil

For the correct match, the game is processed based on scores such as AR game, virtual play, First person controller and Third person controller. For the third person controller users their face is recognized and introduced as a 3D model in the game to provide immersive AR gaming.

The main menu of Padam Inaithal consists of free mode game, settings and exit user interfaces. The settings consist of two language interfaces English and Tamil. The Tamil language interface is used to specify buttons, textual contents and immersive gaming experiences. The words are constructed using online Tamil keyboard and used as a user interface in Kids AR Memory Matching game in Tamil. The required Tamil word cards are created to play the Kids AR Memory Matching game in Tamil and the image recognition technique using Vuforia identifies feature selection points to extract the unique feature points for correct recognition. The interface between Tamil and English is easily switchable using settings options.

To facilitate the children to play, both Tamil and English language interface were developed. Tamil is a consistently head-final language. The verb comes at the end of the clause, with a typical word order of subject-object-verb. However, word order in Tamil is also flexible, so that surface permutations of the SOV order are possible with different pragmatic effects. Tamil has postpositions rather than prepositions. Demonstratives and modifiers precede the noun within the noun phrase. Subordinate clauses precede the verb of the matrix clause. The Tamil language interface is also implemented in certain coding of the paper using mono develop unity. The main menu, free mode game and its scoring, virtual butterfly-squash gaming, first person controller and third person controller gaming are developed for both Tamil and English language interfaces.

4. RESULTS

The words and the image when matched correctly results in correct animal 3D model and if the words and images are not matched correctly, then it results in wrong answer 3D model. For the correct answer test case, the score is increased by one, and proceeds to the next levels. For the wrong answer test case, the score is decreased by one and goes to preceding levels. The experience of Padam Inaithal is shown in **figure** 2.



Figure 2. Correct case “Horse”and Wrong case “Cats”

4.1 Evaluation

The PADAM INAITHAL game is compared with ABC3D mobile game, in order to show the various analysis parameters like Augmented Reality Immersive, gaming levels, user rating, image recognition, user interface and the results are given in **table. 1**

Analysis	Wormage AR game	ABC3D AR game
Image Recogniton	25(out of 26 image content)	26(out of 26 textual image content)
AR Immersive	2(out of 4 levels)	2(out of 4 levels)
Gaming Levels	4(out of 5 levels)	3(out of 5 levels)
User Rating(best)	40(out of 50 people)	38(out of 50 people)
User Interface(Scene alignment methodology)	3(out of 4 UI's)	2(out of 4 UI's)

Table 1 Comparison of PADAM INAITHAL with ABC3D mobile game

In the image recognition technique, there are total 26 cards available and out of the 26 cards PADAM INAITHAL game identifies 25 image content cards and ABC3D game identifies 26 textual image content cards. In the PADAM INAITHAL AR game out of 4 levels, 2 are Augmented Reality oriented and in ABC3D mobile game out of 4 levels, 2 are Augmented Reality oriented. From the survey of 50 people, 40 of them rated PADAM INAITHAL AR game as best, 5 of them rated the game as fair, 3 of them rated it as average and 2 of them rated the game as poor. Also, for the ABC3D mobile game 38 of them rated PADAM INAITHAL AR game as best, 4 of them rated the game as fair, 2 of them rated it as average and 4 of them rated the game as poor. In the PADAM INAITHAL AR game out of 5 levels, 4 levels are completed (ARgame, FPC, TPC, Virtual play) and story environment is not working perfectly. In the ABC3D game out of 5 levels, 3 levels are completed (Textual recognition AR game, Story environment, Virtual play) FPC and TPC is not working perfectly. In the context of user interface Padam Inaithal uses both English and Tamil interfaces whereas ABC3D mobile game uses only English interface.

5. CONCLUSION

Augmented Reality game PADAM INAITHAL (words matching with images game) thought of learning of English language, focused on specific words, in a simple, interesting and interactive way. The results indicate that children who used the Augmented Reality game had a superior English learning progress than those who only used traditional methods. This work indicates that the use of Augmented Reality games has a positive pedagogical impact in the learning process concerning young children, more exactly in the progressive domain of oral recognition of words and concepts and their corresponding written form. Accordingly, we strongly believe that AR will be in a short term, an important tool in the class activities in some areas of education. As a future work, the PADAM INAITHAL (words matching with images game) can be well extended to the teaching and learning processes with students of other ages and in the teaching of other languages. Since PADAM INAITHAL (words

matching with images game) runs in a simple and cheap hardware that requires only a PC equipped with a webcam, it can be used for teaching aids in most schools.

6. REFERENCES

1. A. Mulloni, A. Dunser, and D. Schmalstieg, Zooming interfaces for augmented reality browsers . The Proceedings of the 12th International Conference on Human Computer Interaction with Mobile Devices and Services, MobileHCI, vol 10, 2010, pp.161 170.
2. Fungus in unity, https://fungusgames.com/.
3. He Zhang, Peng Ren, "Game theoretic hypergraph matching for multi-source image correspondences" Pattern Recognition Letters, Volume 87, 1 February 2017, Pages 87-95.
4. I.A. Essa, "Analysis, Interpretation and Synthesis of Facial Expressions", Perceptual Computing Technical Report, MIT Media Laboratory, 1995, pp.303-308.
5. P. Skalski, R. Tamborini, A. Shelton, M. Buncher, and P. Lindmark, Mapping, the road to fun: Natural video game controllers, presence, and game enjoyment , New Media & Society, 2010, pp.1-15.
6. R. Ballagas, J. Borchers, M. Rohs, and J. G. Sheridan, The smart phone:A ubiquitous input device . IEEE Pervasive Computing Technique, vol 5, 2006, pp.70 77.
7. Tao Wang, Quansen Sun n , Zexuan Ji n , Qiang Chen, Peng Fu 'Multi-layer graph constraints for interactive image segmentation via game theory' Pattern Recognition, Volume 55, July 2016, Pages 28-44.
8. Unity guide, https://docs.unity3d.com/ScriptReference/GUI.html.

Digitization, Distribution and Synthesizing Tamil Texts: Challenges of taking Madurai Project to its next step

Ku. Kalyanasundaram[1] and Vasu Renganathan[2]
[1] kalyan.geo@yahoo.com, [2] vasur@sas.upenn.edu

Abstract

Digitizing texts from Tamil literatures of three different genres have been a challenging task, especially in the context of crowd resourcing and distribution. "Project Madurai" (http://www.projectmadurai.org/) has been a very successful attempt ever since it was implemented about twenty years ago. The crowd resourcing method was exploited in a very sophisticated fashion to collect, digitize, proof-read, store and finally distributing to the world. Multiple methods of distribution namely in plain html format, distributable pdf format and in multiple encoding formats namely ascii, eight bit and unicode texts. With the experience we gained on crowd resourcing, we would like to layout a novel way of enriching the existing texts with extendable infrastructure, especially for its effective use in research and learning. This paper attempts to present a method of human assisted machine learning, instead of implementing any algorithm with a full-fledged learning technique. Our goal will be to convert the existing texts into other formats namely JSON, relational database, word net and others. We demonstrate in this paper with suitable interfaces for how human's effort can be included in a supplementary fashion from a crowd resourcing technique, while at the same time machine is trained with suitable data to further manipulate toward outputting them in a comprehensive form. We demonstrate in this paper how the url

http://www.thetamillanguage.com/url_gloss.php?url=

can be used to feed into any Tamil etext page and get a machine learning algorithm built with Crowd-Sourcing technique.

Introduction

The important tasks we would focus on in this paper are a) conversion of HTML texts to a relational database as well as JSON structure, b) identify a plausible and optimum structure for the relational database and JSON formats and c) identify the meaningful ways of performing the stemming practices using a Crow-Sourcing technique. While the first two tasks do not require as much effort as possible, but the success of the most important last task would fully depend upon the former. Stemming and tagging Tamil texts have been the most significant aspect of digitization and distribution of Tamil texts for the reason that the inflected Tamil words of both Sangam, medieval and modern Texts pose a daunting task for information storage as well as retrieval. Many attempts have been made so far to stem and tag Tamil texts, including the one as demonstrated in http://www.thetamillanguage.com/tamilnlp/tagit.html. The aim of this paper is mainly to extend this automatic method of stemming and tagging process into a more manageable method by implementing the crowd resourcing techniques as we demonstrated by the Madurai Project earlier. However, the technique we demonstrate in this paper extends the above automatic method and implement a crowd resourcing method by employing suitable

interfaces. Further, this method will be intended to work with texts from Sangam, medieval and modern period particularly working with the corpus that is presented in the Madurai Project. In essence, this paper attempts to illustrate as well as demonstrate a machine learning technique exclusively exploiting the crowd resourcing process with suitable interfaces for human interference.

Project Madurai

Project Madurai was started twenty years ago with volunteers across the globe performing both collection as well as digitization of Tamil data ranging from old Tamil to modern Tamil. In order to maintain the authenticity, the volunteers were divided into many categories including those collect rare materials, xerox them and send to those who are assigned the task of typing. The other category of people are those who can proof read the text to make sure the digitized data are error free in all respects. When the project was started, there was no any standardized font, as we have in the form of Unicode. With the meticulous involvement of members of INFITT and the Tamil Nadu government, a standard font called TSCII and the volunteers were trained to use this font throughout the process to maintain standard. Later, when Unicode was introduced, we had to convert all of the texts entered in TSCII to Unicode compliant format and it was done using many available convertors.

Significance of Digitization

In general, it is believed that any digitization process is meant for preservation of archaic text. In fact, advantages of digitized text should be more than preservation as far of any linguistic data is concerned. Cross-reference, searching, statistical analysis, conducting historical research etc., are some of the most significant aspects of digitized data. These scopes can not be accomplished with the digitized linguistic data either in HTML or PDF format. Instead, what requires to be done is making the stored data to be accessible in a number of different flexible formats. Storing them in any relational database, for example, would enable anyone to retrieve the data in a multiple number of formats. This paper intends to describe some of the issues involved while converting the existing Tamil literature data that is stored widely in the internet, including that of what is made available in Madurai project.

Stemming Old and Medieval Tamil Data and Limitations of Crowd Resourcing:

One of the immediate requirements for any Tamil literature data is to perform the stemming of inflected forms, as the machine can notbe trained to perform any high level processes unless suitable algorithm is written to make available morphological and syntactic knowledge of the text. Stemming Tamil words into their corresponding morphological units, in general, is a complex task especially for the reasons of its agglutinative nature. But, it is more complicated in the case of old Tamil data as most of the texts in old Tamil are in poetic forms and the words are separated in many odd ways to meet meter and other poem types.

To cite one example, consider the following line from akanāṉūṟu (264):

maḻaiyilvāṉammīṉaṇintaṉṉa

This sentence when attempted to segment using the tagger: http://www.thetamillanguage.com/tamilnlp/tagit.html(See Renganathan 2016 fore details of this tagger) we get the output as below:

[["loc","mazhai","noun"],["nom","vaanam","tr"],["nul","miinaNin"],["nul","tanna"],["nom",".","period"]]

The first two words are segmented as expected, but the other two words did not get the result as desired. This is for the important reason that these words are segmented differently from source words in the poem to maintain meter. When this sentence is realigned as ma̲laiyilvā̲nammīn̲aṇintan̲n̲a

We can get the desired output as:

[["loc","mazhai","noun"],["nom","vaanam","tr"],["nom","miin","tr"],["adv","aNi", "anna","adv_m"],["nom",".","period"]]

Thus, in order to get this desired output, one would need to train the tagger with more rules, but accounting for this type of segmented form adhering to meter is almost impossible. The only solution one would expect to have in this kind of situation is that the tagger needs to have a human intervention for segmenting words that are parsed for metrical purposes. In order to accomplish this type of tasks, though, one would surely depend on crowd resourcing involving people who have sufficient knowledge in old Tamil poems and the segmentation techniques. Limiting people with such knowledge naturally minimizes the power of crowd resourcing, as one can not expect to have as many people as one would expect to have such specialized knowledge.

Javascript Object Notation (JSON) Structure of Medieval and Old Tamil Data:

The important limitation of the Sangam and Medieval Tamil texts , as we have now in http://www.projectmadurai.org/, is that they are all in HTML and PDF formats, which don't have the convenience of searching and researching across different genres of literature. As for using Tamil literature texts for references in the context of writing research articles and books, one would surely need all the texts searchable by many factors including author, poem number, line number, chapters, composition, commentaries and so on. In order to accommodate all of these information as well as exploring Tamil words for their historical changes as well as development of meaning across the genres, what is supposed to be a meaningful attempt is to identify a plausible and resourceful structure of Tamil literature records and use them to build a very comprehensive database, either in JSON format or in any other relational database format. Unfortunately, no such attempts have been made so far, despite many efforts to digitize and preserve Tamil literature from ancient times. Often times, these digitization efforts are of the nature of reinventing the wheels with multiple efforts digitizing and typing the same text by many people.

In this section, we propose an ideal format of Tamil literature data in JSON format and how this can be advantageous over storing text in a rather linier format. JSON format has been one of the very popular data structures that is used by many programming languages including Javascript, PHP, JAVA, Python and so on for the main reason that it can be stored in text format and itdoes not require any relational databases such as MySQL, SQL server, Oracle and so on. Further, it is easily exportable to other database formats without too much programming efforts. What is important is to identify the "key" vs. "value" relationships to account for the data. For example, consider the following poem from Tirumantiram and how it can be presented in a JSON string.

Text:
கடந்துநின்றான்கமலம்மலராதி
கடந்துநின்றான்கடல்வண்ணம்எம்மாயன்
கடந்துநின்றான்அவர்க்குஅப்புறம்ஈசன்
கடந்துநின்றான்எங்கும்கண்டுநின்றானே. (திருமந்திரம் 14).

JSON:

```
[{
        "Number": "14",
        "poem_source": [
                "கடந்துநின்றான்கமலம்மலராதி 1",
                "கடந்துநின்றான்கடல்வண்ணம்எம்மாயன் 2",
                "கடந்துநின்றான்அவர்க்குஅப்புறம்ஈசன் 3",
                "கடந்துநின்றான்எங்கும்கண்டுநின்றானே. 4"
        ],
    "poem_translit_s": [
                "kaṭantuninṟāṉkamalammalarāti 1",
                "kaṭantuninṟāṉkaṭalvaṇṇamemmāyaṉ 2",
                "kaṭantuninṟāṉavarkkuappuṟamīcaṉ 3",
                "kaṭantuninṟāṉeṅkumkaṇṭuninṟāṉē. 4"

]       "poem_parsed": [
                "கடந்துநின்றான்கமலம்மலர்ஆதி 1",
                "கடந்துநின்றான்கடல்வண்ணம்எம்மாயன் 2",
                "கடந்துநின்றான்அவர்க்குஅப்புறம்ஈசன் 3",
                "கடந்துநின்றான்எங்கும்கண்டுநின்றானே. 4"
        ],
        "poem_translit_p": [
                "kaṭantuninṟāṉkamalam malar āti 1",
                "kaṭantuninṟāṉkaṭalvaṇṇamemmāyaṉ 2",
                "kaṭantuninṟāṉavarkkuappuṟamīcaṉ 3",
                "kaṭantuninṟāṉeṅkumkaṇṭuninṟāṉē. 4"
```

```
    ]
      "poem_translation":[
